உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந் திகதி ஆரம்பமானது

[புத்தகம்—௫௨] யாழ்ப்பாணம்:— விக்கிரம ஹூ ஆவணி௴ ௨௰௧ (1940 செப்டம்பர் 5 வியாழக்கிழமை) [இலக்கம்—௪௨]

வாய்மையுடைமை

(ஜீ. சுந்தரமய்யர்)

1. வாய்மை என்றால் என்ன?

(1) வாக்கின் மௌனமாக்கு என்று ஆன்றோர்கள் கூறுவதுண்டு. குறள் போதிப்பதும் அதுவே.

"யாகாவாராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

வாயைத் திறந்து சொல்வது வாய்மையா யிருக்கவேண்டும்.

வாய்மையென்று ஆன்றோரால் சிறப்பித்துக் கூறப்படுவது எது என்று கேட்போமாயின், அது பிறிதோர் உயிருக்கும் தீங்கின் ஒரு சிறிதும் தருதலில்லாத சொற்களைச் சொல்லுதலுமாம். உண்மையல்லாமற் போனாலும் நன்மை விளைவிப்பதனால் வாய்மையென்று ஆன்றோர் கருதுகிறார்கள்.

"பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பதை யொக்கும்; தாமரையில் இலக்குமி வசிப்பதால் சிறந்ததெனக் கருதப்படுகிறது. சேற்றுப்பொய்கையிற் றோன்றிய காரணம் பற்றிப் பேணுமவொழிப்பதும், இரோசா புஷ்பம் முள்ளின் மத்தியிலிருப்பதைக் கருதி மதியாமல் விடுவதும் உலகில் நாம் காண்பதில்லை. ஆகவே வாய்மை புரையற்ற உண்மையல்லாதிருப்பினும் ஆன்றோர் சிறப்பித்துக் குணவிசேஷமாய் விதந்திட்டிருக்கிறார்கள். [illegible] குற்றங்களையும் எல்லாம் ஒருவன் எடுத்துச் சொல்வதாக வைத்துக்கொள்வோம். அவன் சொல்வதெல்லாவும் மெய்யே. அம்மனிதனை உலகம் அரிச்சந்திரன் என்று கருதுமோ அல்லது மூர்க்கனென்று கருதுமோ! வ. உ. சி. உரையிற் குற்றமற்ற உயிருக்குத் தீங்கு பயவாததைச் சொலவல் என்றும், இக் குறள் வாய்மைக்கு விலக்கு என்றும் கண்டிருக்கிறது. குற்றமற்ற உயிர் குற்றமிலலாத உயிர் என்கிற வித்தியாசத்தைக் கற்பிக்கக் குறள் இடந் தருவதாகத் தோன்றவில்லை. யாதொன்றும் தீமையிலாத சொலல் என்று குறள் கூறுகிறது. வாய்மைக்கு விலக்கு எனச் சாற்றுவது சரியன்று. இது சுத்த உண்மைக்கு விலக்கு. 'பொய்மையும் வாய்மையிடத்த' என்ற குறள் கிளந்திட்டதால் வ. உ. சி. உரை ஏற்றுக்கொள்வதற்கில்லை. குற்றம் எது குற்றமில்லாதது எது என்பவைகள் காலம், இடம், நிலை, திட்டம், சட்டம் ஆகியவைகளைப் பொறுத்திருக்கிறது. "குற்றம் நீ குணங்கள் நீ" என்று ஞானசம்பந்தர் சாமியையே பாடியிருக்கிறார். குற்றமும் குணமும் மனிதரிடத்திலிருப்பது இயல்பே.

(2) மெய்தரும் சொல்லும் பொய்மை யென்பதற்கு இக்குறள் உதாரணமாகும். பொய்போலத் தோன்றும் சொற்களும் பயன் விளைவிக்க குற்றமற்ற நன்மை புண்டாகுமானால் வாய்மையின் நிலையை யுடையனவாம்.

பொய்மை வாய்மைக்கு எதிர் மறை. பொய்மை குற்றமுள்ளதே தள்ளத்தக்கதே. ஆயினும் பல சமயங்களில் உண்மையை மறைக்க வேண்டியிருக்கும். தாயார் "பேதிக்கு சாப்பிடமாட்டேன்" என்று பிடிவாதங்கொண்ட தன் மகனை 'கரும்பு அப்பா இது சாப்பிடு' என்று பேதிக்கு மருந்து கொடுத்தல் உண்மையை மறைத்துவிட்டாலும் நன்மை விளைவிப்பதால் வாய்மையென்றே கருதவேண்டும். பொய், மறைவு, புரை, பொச்சு, இவைகள் ஒரு பொருட் சொற்கள். ஒரு பண்டிதன் பல பேர்களுக்குப் பேதிக்குக் குளிகை கொடுக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். ஒருவன் அதிகமாய்ப் பேதியாகி இறந்துவிடுகிறான். புரை தீர்ந்த நன்மை பயக்கவில்லையே என்று வைத்தியனைத் தண்டித்து விடலாமா? பயமில்லைக்கு வாய்க்குமிறோம். பொச்சு திழுக்கு வேலைக்கு ஏயக்கில்லாமற் போய்விடுகிறது. இச் சமயங்களில் ஆற்றமா குற்றமில்லையா என்பதை நிச்சயிக்கப் பயனையே ஏதுவாய்க் கொண்டு தீர்மானம் செய்யமுடியாது. மாசுபட்டு ஐயப்பட ஏதுவாயுள்ள உலோக கட்டியை உரைகல்லில் உரைக்க அது பத்தரைமாற்றுக்குக் குறைவாய்த் தோன்றலாம். பொன்கட்டியைத் தூர எறிந்து விடலாமா? தீ என்று இகழ்ந்து விடலாமா? பொய்போலத் தோன்றும் சொற்களின் பயனினாலும் வாய்மையென நிச்சயிக்கவேண்டும். வாய்மை யல்லாதது குற்றமற்ற நன்மையை விளைவிக்காது.

நமது உயிரைக் காப்பாற்ற ஒரு உறுப்பைக் களைவது போலும், ஊரைக் காக்க ஒருவனை மாய்ப்பது போலும், நாட்டை முன்னேற்றப் பலர் மடிவது போலும் நாம் கண்ட அறநீதிகள் போன்றது பொய்மையும் வாய்மையிடத்தவாவது.

புரைதீர்ந்த நன்மை பயக்கப் பொய்யும் பேசுவது அறமென்றுகிறது. "அஸ்வத்தாமா" அதக் குஞ்சரக" என்று தருமபுத்திரன் உதவியுடன் பாரதயுத்தத்தில் கண்ணன் சங்காரஞ் செய்தார். துரோணன் அருச்சுனனால் மாண்டான். தருமபுத்திரன் பேசியது பொய்மையா வாய்மையா? கண்ணன் விளையாட்டுச்சூழ்ச்சியா? தருமபரிபாலனமா?

"பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே", "மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே" என்கிற வாக்குகளில் நாம் அறியவேண்டியது யாதெனின் சொற்களைக் கொண்டு மாத்திரம் வாய்மையையும் பொய்மையையும் சித்தரிக்கப் படுத்த முடியாதென்றும் உள்ளத்தின் நிலையும் நினைவுமே சிறப்புடைத்தா மென்றறிக்க ஆன்றோர் சொற்களிற்றும் தன்மையைக்கொண்டுதான் தீர்மானிக்க வேண்டுமென்றும் திட்டம் விதித்திருக்கவேண்டும்.

ஆகவே யாதொன்றும் தீமையிலாத சொற்களே புரைதீர்ந்த நன்மை பயக்கும் என்று சொல்ல வேண்டும்.

கனவிலும் மறந்தும் பொய்பேச எண்ணாதே என்ற உண்மையை வெளிப்படுத்தும் பான்மையில் அடுத்த குறள் அமைந்திருக்கிறது.

2. உயர்வே உள்

(3) வள்ளுவனார் மிகவும் விசயசம்பத்து வாய்ந்தவர். வடமொழி வேதம்போல் இதைச்செய் அதைச் செய்யாதே என்று முன்னிலை ஏவல்போல சொல்லாமல் இப்படி ஒழுகின் மேன்மை கிடைக்கும் என்று சொல்லி சில சமயங்களில் பொய்மை மொழிகளையும் கூறலாமென மயங்காமல் இக்குறளில் தெளிவு படுத்துகிறார்.

உள்ளத்தால் உள்ளியதொன்றை மறையாது வெளிக்கூறி அதன்படி நடப்பானேல், அவன் உலகத்துள்ள உயர்ந்தோர் உள்ளத்திலெல்லாம் பிரியாதிருக்கும் பெற்றிவாய்ந்தவன் ஆவான்.

இவ்வதிகாரத்திற்கு இக் குறள் உயிர்நிலை என்று கூறலாம். முதகுறள்களிலும் ஒன்றுபோல் நடப்பவன் தன்மையை விவரித்தது. இதற்கு அரிச்சந்திரனைத் தான் சான்றாய்க் கூறவேண்டும். அரிச்சந்திரன் பல கொடுமைகளுக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்டான் என்று மாத்திரம் சரித்திரம் கூறுவதேயொழிய பிற உயிருக்குத் தீமையைச் சிறிதேனும் செய்தானென்று மொழியாததால் இத் தன்மை வாய்ந்தவனும், பிற உயிருக்குத் தீமையிலாத சொற்களையே தான

தொடர்ச்சி ௩-ம் பக்கம்

இலக்கண நூல் உரை

(வீ. ஏகாம்பரநாதன் மீசாலை)

"எண்ணெழுத் திகழேல்" "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு" என எண்ணெழுத்திரண்டும் உலகத்து வாழும் மக்களுயிர்க்கு இருகண்கள் போற்சிறந்தனவென்பது ஆன்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. இங்கே காட்டியமூல பாடங்கட்கு உரைசெய்தார் எண் என்பதற்குக் கணிதமென்று பொருளுரைத்தனர். பரமதகிமிரபானு ஆசிரியர் எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும் பயனைக் கண்ணுககாணபார்க்கதி நாண்டலறு மாணாக்கரைதபருத்தா பத்தியினை யீண்டுரைத்த வெண்ணெனவே யெண் என்பவற்றால் எண்ணென்பது தருக்கமெனக் கூறினர். அவர் ஈண்டுரைத்த என்றதனற் கணிதமென்பதும் அவருக்கு முடன்பாடாதல் பெற்றாம்.

எழுத்து என்பது இலக்கணங் கண்போற்சிறந்த விலக்கண நூலைக் கசடறக்கற்றல் கற்போர்க்கெல்லாம் இன்றியமையாச் சிறப்பிற்றாகலின் தமிழிலக்கண நூல்களிற்றலைசிறந்து விளங்குவனவாகிய தொல்காப்பிய நன்னூலுரைகளிற் கற்பிக்குங்காற் பிழையெனக்காண்பவற்றை மாணாக்கருக்கு உபகாரமாதற் பொருட்டு இச்சாதனமாகிய பத்திரிகைவாயிலாக வெளியிடலாயினோம்.

தொல்காப்பியத்து மூவளபிசைத்தலோரெழுத்தின்றே என்னுஞ் சூத்திரச் சேடவுரையில் எனவேபலவெழுத்துக்கூடியவிடத்து மூன்றுமாத்திரையும் நான்கு மாத்திரையும் இசைக்குமென்றமாறு என்பது நச்சினார்க்கினியம். விகாரமாகிய இசைநீடியதற்கு உண்டு; என்பது இளம்பூரணம் இவ்விரண்டுமிகையே நீட்டம் வேண்டினவ்வளபுடைய கூட்டியெழூஉதலென்மனார் புலவர். என்பதனால் அப்பொருள்கள் வெள்ளிடைமலைபோல் விளங்குதலின் எனவே பெரும்பான்மை மூன்று மாத்திரையே பெறுமென்றார் புலவர்; என்பதும் நச்சினார்க்கினியம் இங்கே மூன்று மாத்திரையே பெறுமென்றவர் அப்புலவர் எனக்கடாவினர்க்கு விடை ஆண்டுப் பெறவரிதாகலின் அது போலியுரையேயாமெனக. நீட்டம் வேண்டின் என்னுஞ் சூத்திரத்து அவ்வளபுடைய கூட்டி எழூஉதல் என்பதற்கு அவ்வளபுடைய இனமொத்த குற்றெழுத்தைக்கூட்டி எழூஉப்புக என்றும் எழுதுகவென்றும் பொருள் கூறல் வேண்டும். எழூஉப்புதல் ஒலிவடிவினும் எழுதுதல் வரிவடிவினுமெனக. அவ்வாறெழுதாக்கால் இத்தனை மாத்திரை நீண்டுநீட்டி வாசிக்க வேண்டுமென்பது வாசிப்போர்க்கு தெற்றெனப் புலனாகாதலின் அவ்வளவுடைய இனமொத்த குற்றெழுத்தையே கூட்டுகவென்பது குன்றிசைமொழி வயினின்றிசை நிறைக்கும் நெட்டெழுத்திம்பரொத்த குற்றெழுத்தே என்பதனற் பெறாம். அற்றேல் வழி நூலாகிய நன்னூலார் இசைகெடின் மொழிமுதலிடைகடை நிலைநெடில் அளபெழுமவற்றவற்றினக் குறிலே எனஅளபெழுங்கால் நெட்டெழுத்தே மூன்றுமாத்திரையாயும் நான்கு மாத்திரையாயும் நீண்டிசைக்குமெனவும் குற்றெழுத்து அறிகுறி மாத்திரையாயே நிற்குமெனவும் கூறிய தென்னையெனின் அறியாது கூறினாய்! வழிநூல் செய்யுங்கால் முன்னோர் மொழிபொருளேயன்றியவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவமென்பதற்கும் முன்னோரின் வேறு நூல்செய்துமெனும் மேற்கோளில்லென்பதற்கும் கூறபழஞ் சூத்திரத்தின்கோளென வழிநூல் செய்வார் கடப்பாடாகச் செய்யுமாறிதுவெனக் கூறித்தாம் முதனூற் சூத்திரங்கள் பலவற்றை இடையேயிட்டுப் போந்தவர் முதனூற்கு எட்டுணையேனும் விரோதமுறச் சூத்திரஞ் செய்யாராகலின் உரைகாரர் கொண்ட பொருளை விரோதமாகலின் எங்க. அற்றேல் விரோதமறப் பொருள் கொள்ளுமாறு எங்ஙனமெனின் காட்டுதும். இசைகெடின் செய்யுளோசை குன்றலின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில் மொழிமுதலினும் மொழியிடையினும் மொழியிறுதியினும் நின்ற நெட்டெழுத்து ஏழும் சீருஞ்சேர்ந்தாற்போல தந்தமக்கு இனமாகிய குற்றெழுத்துக்களோடு கூடி அவ்வோசையை நிறைத்தற் பொருட்டு நீண்டொலிக்கும் குறியே ஒலிவடிவில் அவ்வாறு கூடி நீண்டிசைத்தலறிதற்கு வரிவடிவில நீட்டிக்கும் நெட்டெழுத்தின்பின் அதனோடு கூடி நிற்கும் குற்றெழுத்து அவ்வாறு கூடி அந்நெட்டெழுத்தின் நீட்சிக்கு உபகாரமாய் நிற்றலை யறிவிக்கும் அறிகுறியாய்வரும் என்றவாறு என்பதே. இதுவே சிவஞானபோதமா பாடிய கருத்தாவாகிய சிவஞானசுவாமிகள் கருத்துமாதலை அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பதொன்றாயினும மொழிக்காரணமாய வேறுபொருள் தாராது இசைநிறைத்தன மாத்திரைப்பயத்ததாய் நிற்றலின் வேறெழுத்தென வைத்தெண்ணப்படாதாயிற்றென்பது நன்னூணர்வாரெளிதுணர்க. குன்றிசை மொழிவயினின்றிசை நிறைக்கு நெட்டெழுத்திம்பரொத்த குற்றெழுத்தே என்றதூஉம் இக்கருத்துப்பற்றியென்க எனச்சூத்திர விருத்தியுளோதியவாற்றானுணர்க.

இனி நன்னூல் விருத்தியுரையாளர் எழுத்துப்படலாயின ஒலிவேற்றுமையானன்றே அங்ஙனமாதலின் நெடிலது விகாரமாய் ஓரொலியாய்ப் பிறப்பதே அளபெடையென்பார் நெடிலளபெழுமென்றும், அவற்றவற்றினக்குறில் குறியேயென்றுங் கூறினர். ஆசிரியர் தொல்காப்பியரும் சீருஞ்சேர்ந்தாற்போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்தொத்து நின்று நீண்டிசைப்பதே அளபெடை யென்பார், "குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு நெட்டெழுத்திம்பரொத்த குற்றெழுத்தே" என்றார்.

"இங்ஙனம் ஒலிபற்றிக் கூறும் வகையான் இருவர்க்கும் கருத்தொன்றேயாயினும், குறியே என்றது இவ்விரண்டு மேற்கோளில் ஒன்று துணிதலான் ஒருதலை துணிதலென்னு முத்தியுற அம்மதமும் பட வந்ததென்க" என்றார். ஒருதலை துணிதலாவது இருவரால் விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டுபக்கத்துள் ஒருபக்கத்தைத் துணிதலேயாமாதலானும், ஈண்டு விரோதமாகக் கூறிய இருவரும், இரண்டு மேற்கோளு மின்மையானும், "குன்றிசை மொழிவயின்" என்னுஞ் சூத்திரம் இரண்டுமேற்கோளாகப் பிரித்தற் கேலாமையானும் பிரிப்பினும் அது இருவர் பக்கமாகாமையானும், தொல்காப்பியர், நன்னூலார் என்னுமிருவரும் விரோதமுறச் சூத்திரஞ் செய்திலரென்பது தமக்கு முடன்பாடாகலானும், செய்தனரெனினும் அவற்றுளொன்று அணிவார் மதிநுட்பமுடையாரையே யமையவேண்டுமாகலானும் அவ்வுரை போலியுரையே யாமெனக.

"தற்சுட்டளபொழியைமுவழியு நையுமெனவு முதலாகும்" என்னுஞ் சூத்திரத்திற்கு ஐகாரம் தற்குறிப்பும் அளபெடையுமொழியச் சொல்லுக்கு முதல் இடை கடையென்னும் மூவிடத்தும் தன்மாத்திரையிற் குறைதலுமுண்டு, ஔகாரமும் மொழிமுதலில் அவ்வாறுகுதலுமுண்டு என "ஞானபாநுவிடமுமா ருண்டேச" என்னும் முதனூற் சூத்திரத்தோடு மாறுபடா வண்ணம் உரைசெய்யாது, "ஐகாரம், தன்னைக் கருதித் தன்பெயர் கூற

(தொடர்ச்சி ௩-ம் பக்கம்)

அகில-இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சை

சென்ற பிரமாதி வருடம் பங்குனி௴ (24-3-40) கொழும்பு விவேகானந்த சபையார் நடத்திய அகில இலங்கைப் பரீட்சைப் பேறின் விபரப் பிரதியொன்று வரப்பெற்றேம். அதன்கண் சித்தியடைந்த மாணவர்களின் பெயர், அந்தஅந்த மாணவர்கள் கல்வி பயிலும் வித்தியாசாலைகளின் விபரம், பரிசு பெற்றோர் குறிப்பு முதலிய சகல வரலாறுகளும் தெளிவாக அச்சிடப் பெற்றுள்ளன. இச்சமய பரீட்சை மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. கீழ்ப் பிரிவில் 434 பிள்ளைகளும், மத்திய பிரிவில் 103 பிள்ளைகளும், மேற்பிரிவில் 24 பிள்ளைகளும் சித்தியடைந்திருக்கின்றனர். இம்மாணவருட் பரிசு பெற்றோர் பலர்; விசேட பரிசு பெற்றோர் சிலர்.

விசேஷ பரிசு பெறுவோர்

மேற்பிரிவு 1-ம் பரிசு சி. நடராசா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை. 2-ம் பரிசு சி. தெய்வானை காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை. 3-ம் பரிசு வி. ரவரத்தினம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை.

மத்திய பிரிவு ஆங்கிலவித்தியாசாலை 1-ம் பரிசு பொ. ரவரத்தினம் தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை 2-ம் பரிசு பொ. வணனியசிங்கம் காரைநகர் சைவாங்கில வித்தியாசாலை. தமிழ் வித்தியாசாலை 1-ம் பரிசு கு. சிவசம்பு வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை. 2-ம் பரிசு கா. கற்பகவல்லி சண்டிருப்பாய் வடக்கு சைவவித்தியாசாலை.

கீழ்ப் பிரிவு ஆங்கில வித்தியாசாலை 1-ம் பரிசு S. A. சுப்பிரமணியம் காரைநகர் சைவாங்கில வித்தியாசாலை. 2-ம் பரிசு க. செல்லம்மா, ஈ. செல்லம்மா சுன்னாகம் ஸ்ரீ இராமநாதன் கல்லூரி. தமிழ் வித்தியாசாலை 1-ம் பரிசு க. கறபாத்தை வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை 2-ம் பரிசு ச. திருஞான சம்பந்தமூர்த்தி அம்பனைச் சிவப்பிரகாச வித்தியாசாலை.

இப்பரீட்சைக்கு மாணாக்கரை ஆயத்தஞ் செய்தனுப்பிய ஆங்கில வித்தியாசாலைகளும் கல்லூரிகளும் பின்வருவனவாம். 1 அளவெட்டி ஆங்கில வித்தியாசாலை; 2 கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி; 3 காரைநகர்ச் சைவாங்கில வித்தியாசாலை; 4 சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி; 5 சுன்னாகம் ஸ்ரீ இராமநாதன் கல்லூரி; 6 தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை. தமிழ்ச் சைவவித்தியாசாலைகளும் அரசினர் வித்தியாசாலைகளும் சேர்ந்து ஐம்பதுக்கு மேற்பட்டன வெனலாம். அந்தந்த வித்தியாசாலைகளுட் பெரும்பாலானவை வடமராட்சி தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பிரிவு, வலிகாமம், தீவுப்பற்று, வவுனியா முதலிய பிரிவுகளிலுள்ளவைகளாவன; கொழும்பு, மட்டக்களப்பு, மாத்தளை முதலிய பகுதிகளிலுள்ள சிலவித்தியாசாலைகளிலும் இப்பரீட்சைக்குப்பிள்ளைகள் பயிற்றப்பட்டுச் சித்தியடைந்திருக்கின்றார்கள்.

உற்சவ ஆரம்பம்

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் கொடியேற்றம் ஆவணி மாசம் 23-ம் திகதி சனிக்கிழமை யெனப் பஞ்சாங்கத்திலிருக்கிறது. இப்பொழுது தீர்த்த உற்சவத்தைக் கூட்டி வைத்திருக்கிறார்கள். எனவே 1 சனி முதல் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றமென அறிகின்றேம். தேர் உற்சவம் ஆவணி மாசம் 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தோற்சவம் புரட்டாதிமாசம் 1-ந் திகதி திங்கட்கிழமையும் நடைபெறுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். [illegible]

சிறையில் கேட்ட திருவாக்கு

பி. கோதண்டராமன்

இது ஸ்ரீ அரவிந்தர் 1909-ம் ஆண்டு அலிபூர் சிறையிலிருந்து விடுதலையானதும் உத்தர பாரா என்னும் ஊரில் 'சமயப்பாதுகாப்புக் கழக'த்தின் ஆண்டு விழாவின்போது நிகழ்த்திய சொற்பொழிவின் முழு மொழி பெயர்ப்பாகும்.

(முற்றொடர்)

கீதையில் கண்ட சாதனை

பிறகு அவன் கீதையின் பிரதியொன்று எனக்குக் கிடைக்கும்படி செய்தான். அவனது சக்தி என்னுள்ளே புகுந்ததால், கீதையில் கண்டுள்ள சாதனையைச் செய்ய முடிந்தது. "விருப்பு வெறுப்பற்று இருக்க வேண்டும்; பலனைக் கோராமல் அவன் பணி புரிதல் வேண்டும்; தன் விச்சையைத் துறந்து அவனது கரங்களில் அமைதியும் நம்பிக்கையும் உள்ள ஓர் கருவியாக ஆதல் வேண்டும்; மேலோன் கீழோன், நண்பன் பகைவன், வெற்றி தோல்வி இவைகளையெல்லாம் சமநோக்குடன் பார்க்க வேண்டும்; ஆயினும் அவனது பணியைக் கவனமாகச் செய்தல் வேண்டும்" எனக் கண்ணன் அருச்சுனனுக்கு உபதேசம் செய்தான். அவன் பணி செய்ய விரும்புவோருக்கும் அவன் அதையே உபதேசம் செய்கிறான். இவ்வுபதேசங்களை நான் என் புத்தியால் அறிந்து கொள்வதோடு நில்லாமல், எனது உள்ளுணர்வாலும் உணரவேண்டியவனானேன்.

சநாதன தருமத்தின் பெருமை

இந்து சமயத்தின் பொருள் எனக்கு விளங்கிற்று. இந்த சமயமே சநாதன தருமம் என நாம் அடிக்கடி கூறுகிறோம். ஆனால் நம்மில் வெகு சிலரே அச்சமயம் எத்தகையது என்பதை உண்மையாக அறிவர். பிறசமயங்கள் பெரும்பாலும் நம்பிக்கையையும் கோட்பாடுகளையும் ஆதாரமாகக் கொண்டு விளங்குவன. ஆனால் சநாதன தருமம் வாழ்க்கையே யாகும். வெறும் நம்பிக்கையை அது அவ்வளவாக வற்புறுத்துவதில்லை; அது வாழ்க்கையில் கையாளப்பட வேண்டிய தொன்றாகும். மக்கட்குலம் உய்ய வேண்டி இந்தத் தருமம் பண்டைக் கால முதல் இந்நாட்டில் தனிமையாகப் போஷிக்கப்பட்டு வந்தது. இம்மதத்தை உலகிற் களிக்கவே பாரதநாடு எழுச்சி பெற்று வருகின்றது. பிற நாடுகளைப் போன்று சுயநலத்திற்காகவோ, வலிமை கொண்ட பின் எளியாரை மிதித்து நசுக்கவோ அது எழவில்லை. தன் வசம் ஒப்படைக்கப்பட்ட சநாதன ஒளியை உலகின்மீது சொரியவே அது எழுச்சி பெற்று வருகின்றது. பாரதத்தாய் தனக்காக அல்லாமல் மக்களினத்திற்காகவே என்றும் வாழ்ந்து வந்திருக்கிறாள்; தன் பொருட்டல்லாமல் மக்களினத்தின் பொருட்டே அவள் பெருமையுற்று விளங்குவதும் அவசியமாகும்.

சிறையில் கண்ட காட்சி

ஆகவே, இந்துசமயத்தின் மூலாதார உண்மையை எடுத்துக் காட்டி நான் தெளிவடையும்படி செய்தது அவனது அடுத்த வேலையாகும். அவன் சிறைக் காப்பாளர்கள் என் மீது இரக்கங் கொள்ளும்படி செய்தான். அவர்கள் சிறையதிகாரியான ஆங்கிலேயனிடம் சென்று "இவர் தனியறையில் அடைபட்டு அவதிப்படுகிறார். காலையிலும் மாலையிலும் அரைமணிநேரமாவது இவர் தன் அறைக்கு வெளியே உலாவ உத்தரவு கொடுங்கள்" எனக் கேட்டனர். அவ்வண்ணமே உத்தரவாயிற்று. நான் அவ்விதம் உலாவிக் கொண்டிருக்கையில் இறைவனது சக்தி மீண்டும் என்னுள் புகுந்தது. மற்ற மனிதர்களிடமிருந்து என்னைப் பிரித்துத் தனித்து வைத்திருந்த சிறையை நோக்கினேன். அதன் உயரமான மதில்கள் இனியும் என்னைச் சூழ்ந்து சிறைப்படுத்தவில்லை. வாசுதேவனே என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தான். என் சிற்றறைக்கு எதிரேயிருந்த மரக்கிளைகளின் கீழ் உலாவினேன். ஆனால் அது மரமாக எனக்குக் காட்சியளிக்கவில்லை; வாசுதேவனே, ஸ்ரீ கிருஷ்ணனே அங்கு நின்று கொண்டும் தன் நிழலை என் மீது பரப்பிக் கொண்டும் இருந்ததைக் கண்டேன். சிறைக் கம்பிகளையும், வெறும் மரநிகளாயிருந்த கதவையும் நோக்கினேன். மீண்டும் அங்கு வாசுதேவனையே கண்டேன். நாராயணனே பாராக்காரனாக இருந்து என்மீது காவல் புரிந்தான். படுப்பதற்கென எனக்கு அளிக்கப்பட்ட முரட்டுக் கம்பளியின் மீது படுத்திருக்கையில் ஸ்ரீ கிருஷ்ணனது கரங்கள் என்னைத் தழுவின. அக்கரங்கள் எனது நண்பனது எனது காதலனது கரங்களேயாகும்! ஆண்டவன் எனக்கு அளித்த ஆழ்ந்த காட்சியின் முதற் பயன் இதுவேயாகும். சிறையில் கைதியாயுள்ள கள்ளர், கொலைஞர், வஞ்சகர் அனைவரையும் நோக்கினேன். அவர்களை நோக்குகையில் வாசுதேவனது உருவமே என் கண்ணுக்குத் தென்பட்டது. இருளடைந்த அவர்களது உள்ளங்களிலும் தீயவழியில் உபயோகம் செய்யப்பட்ட அவ்வுடலங்களிலும் நாராயணனையே கண்டேன். இக்கள்ளர் கொலைஞர் பலரிடையே நான்கண்ட அனுதாபமும் நேசமும், தங்களது துரதிருஷ்ட நிலையிலும் அவர்கள் காட்டின கருணையும் என்னையும் வெட்கமடையச் செய்தன. அவர்களில் ஒருவன் ஒரு முனிவனைப் போலக் காணப்பட்டான். அவன் ஏன் நாட்டுக் குடியானவன்; கபடமும் சாதி இறுமாப்பும்கொண்டுள்ள நம்மால் இழிவு படுத்தப்படும் கீழ் மக்களில் ஒருவன். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கொள்ளைக்காரன் எனக் குற்றஞ் சாட்டி அவனுக்குப் பத்து வருடங்கள் கடுங்காவல் விதித்திருந்தனர். மீண்டுமோர் தடவை இறைவன் என்னைப் பார்த்து, "எவ்விதமான மக்களிடையே எனது பணியை ஒரு சிறிது செய்யும் பொருட்டு உன்னை அனுப்பியுள்ளேன், பார். நான் கை தூக்கிவிட்டுக் கொண்டிருக்கும் மக்கள் இத்தகைய இயல்புடையவர்கள். இதுகாரணம் பற்றியே அவர்களைக் கைதூக்கி விடுகிறேன்." எனத் திருவாய் மலர்ந்தருளினன்.

நீதி மன்றத்தில் கண்ட காட்சி

கீழ்க்கோட்டில் விசாரணை ஆரம்பமாயிற்று. எங்களை மாஜிஸ்டிரேட்டின் முன் கொண்டு வந்து நிறுத்தினர். அப்போதும் அதே உட்பார்வை எனக்குத் தொடர்ந்து இருந்து வந்தது. இறைவன் என்னை நோக்கி, "உன்னைச் சிறைப்படுத்தினபோது, நீ மனம் கெஞ்சி உன் பாதுகாப்பு எங்கே என என்னிடம் முறையிட்டாயல்லவா? இப்போது மாஜிஸ்டிரேட்டையும் உனக்கு எதிராக வழக்கு நடத்தும் சர்க்கார் வக்கீலையும் பார்" எனப் பணித்தார்.

அவ்வண்ணமே பார்த்தேன். நான் பார்த்தது மாஜிஸ்டிரேட் அல்ல; வாசுதேவனே, நாராயணனே நீதிபதியின் ஆசனத்தில் அமர்ந்திருந்தான். சர்க்கார் வக்கீலிடம் என்பார்வையைச் செலுத்தினேன். ஆனால் நான் கண்டது வழக்கை நடத்தும் சர்க்கார் வக்கீலல்ல; எனது காதலனும் தோழனுமான ஸ்ரீ கிருஷ்ணனே அங்கு அமர்ந்து புன்னகை புரிந்தான்.

வரும்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம ௵ ஆவணி௴ உகஉ வியாழக்கிழமை

யுத்தந் தொடங்கி ஓராண்டானது

முக்கிய யுத்தங்கள்போக, போலந்து யுத்தம் தொடக்கமாக சென்ற சனிக்கிழமை (31-8-40) முடிய ஒரு ஆண்டும் நிறைவேறியது. செக்கோசிலேவக்கிய டான்ஸிக் என்னுமிடங்களை ஜர்மனியர் தாக்கிச் சமர்செய்யத் தொடங்கிய போதே, பிரான்ஸியரும்பிருத்தானியரும் ஜர்மனியருடன் வெளிப்படையாகப் போர்க்கறை கூவினர். அந்த நேரத்தில் இந்த யுத்தம் இவ்வளவு காலத்திற்கு நீடித்து நிற்குமென்றும் இப்படியான பெரும் மாறுதல்களும் அனர்த்தங்களும் வருமென்றும் எவரேனும் எதிர்பார்த்திருந்தாரல்லர். குறித்தஓர் ஆண்டினுள் நடைபெற்ற மாறுதல்களையும் யுத்த வினையையும் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்துத் தேதிகளுடன் வெளியிட்டுள்ளேம். போலண்டு யுத்தந் தொடங்கிய நாண் முதலாக இற்றை வரையில் நேர்ந்த மாறுதல்களும் அனர்த்தங்களும், முக்கிய மகாயுத்தகாலத்தில் நடந்தவைகளைக் காட்டிலும் அதிகமானவை யெனலாம்; போலண்ட், நார்வே, டென்மார்க், பெல்ஜியம், ஹொலண்ட், லக்ஸம்பேர்க், பிரான்ஸ் என்னும் ஏழு நாடுகள் ஜர்மனியர் கைப்பட்டன; நார்வே அரசரும், பெல்ஜியத்தரசரும், ஹொலாந்த ராணியும், லக்ஸம்பேர்க் ராணியும் தங்கள் தங்கள் நிலைமைகெட்டு அந்நிய நாட்டில் ஒதுக்கிடந் தேடியும் தங்கள் நாட்டிற் சிறைப்பட்டும் இருக்கலாயினர். யுத்தத்தினால் நேர்ந்த பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் பணச் செலவும் ஆபத்துக்களும் இவ்வளவென்றும் இப்படியானவை யென்றும் எடுத்துச் சொல்லுந் தரத்தவன்று. இதற்கிடையிற் சமயம்பார்த்திருந்த இத்தாலியரும் ருஷியரும் காலகதியில் யுத்தத்திற் சம்பந்தப்பட்டு ஜர்மனியருக்குத் துணையாகித் தங்கள் கருமம் பார்க்கத் தலைப்பட்டுக்கொண்டனர்.

இவைகளொருபுறமிருக்க, பிரான்ஸியருக்கும் பிருத்தானியருக்குமிடையே துவேஷமும் பிரிவும் வருமென எவரும் அக்காலத்தில் நினைத்திருக்க வில்லை; அல்லாமலும் பிரான்ஸ் தோல்வியுறுமென்றும் பிருத்தானியரும் பிரான்ஸியரும் பரஸ்பரம் மாறுபட்டுச் சமர் புரிவரென்றும் எவராயினும் கனவிலாயினும் எண்ணியதில்லை. இப்படியான அனர்த்தங்களும் மாறுபாடுகளும் மனிதத்தத்துவத்திற்கு மேற்பட்டவை யென்றும் தெய்வசங்கற்பமென்றும் இந்துக்களாகிய நாங்கள் எண்ணப் பழகிவிட்டோம்; ஆனல் மேலைத்தேசத்தார் அப்படி நினைப்பார்களா? இந்த ஒரு வருடகாலமும் உலகம்பட்டுவந்த அல்லோலகல்லோலம் சற்றல்லவே! இன்னும் இந்த உலகம் அநுபவிக்க விருக்குங் கஷ்டங்கள் எவ்வளவென்பதை உலகினர் அறியார், தெய்வம் அறியும்.

குறித்த ஒருவருட யுத்தம் போக இப்பொழுது நடக்கும் யுத்தமே கோரமானதெனலாம். மேலே சொல்லப்பட்ட நாடுகளையெல்லாம் தேடிச் சொல்லிச் சொல்லி வென்ற ஹிட்லர் பிருத்தானியாவைத் தாக்கத்தொடங்கித் தடைப்பட்டு நிற்கின்றார். போலண்ட் தொடக்கம் பிரான்ஸ் இறுதியாகவுள்ள நாடுகளைத் தாம் ஜெயித்ததுபோல் விரைவாகவும் இலகுவாகவும் பிருத்தானியரை வெல்ல முடியாது என்ற இரகசியத்தைக் ஹிட்லர் முந்தியும் அறியாதவரல்லர்; ஆனல் பிருத்தானியர் தம்முடன் நிர்வகித்து நின்று சமர்செய்யத் தக்கவர் தமது நோக்கத்தைத் தடைப்படுத்தத்தக்கவரென்பதை நேரே ஹிட்லர் இப்பொழுது தான் அறிந்தனர்போலும்; பட்டாலறிவன் சண்டாளன் என்பது பழமொழியல்லவா? பிருத்தானியரெனிலோ செய்தார்க்குச் செய்வது செத்தபிறகா என்று ஆவேசங்கொண்டு நிற்கின்றனர்; லண்டனில் ஜர்மானிய ஆகாயப்படை வெடிகுண்டு இட்டால், பேர்லினில் பிருத்தானியப்படை இன்னும் உறைப்பாக வெடிகுண்டு பெய்ய முடியும் என்பதை எங்கள் பிருத்தானியர் ஹிட்லருக்குத் தெருட்டிவிட்டார்கள். ஆனல் இப்பொழுது நடக்கும் ஆகாய யுத்தத்தினல் மாத்திரம் விரைவில் எவர்க்காயினும் வெற்றி தோல்வி நேருமெனக் காத்திருக்கவொண்ணாது. முற்காலத்திலே தரைச்சண்டை கடற்சண்டையென இருவகையான சண்டைகளைப் பற்றித்தான் நாங்கள் தேச சரித்திரத்திற் படித்திருக்கிறோம். ஆனல் இப்பொழுது மேலைத்தேசத்தார் பிருதவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூத வாயிலாகவும் யுத்தஞ் செய்யப் பயின்று கொண்டார்கள்! இந்த யுத்தம் எங்கே போய் முடியுமோ, எப்படி முடியுமோ என்பதைச் சொல்லுதல் யுத்தத்திற் சம்பந்தப்பட்ட சாதியாராலும் முடியாது, மற்றை எவர்களாலும் முடியாது. இந்தக் கொடிய யுத்தத்தினல் உலகம் முழுவதும் படும்பாடு சற்றல்ல. நன்மையாலும் தீமையாலும் அதிகப்பட்டால் அதன்பலன் உடனே பிராப்தியாகு மென்பது பஞ்சதந்திரம். இரண்டு பிரிவினரும் தனித்தனி தங்களுக்கு வெற்றி வருமென்று நம்பி யுத்தம் செய்கின்றார்கள். பிருத்தானியரெனிலோ உலகத்திற்குச் சுயாதீனத்தை உதவவும், உலகம் முழுவதும் நிலையான சமாதானத்தை ஆக்கிவிடுதற்குமே யுத்தஞ் செய்கின்றார்கள்; அப்படியானல் ஈற்றில் எங்கள் பிருத்தானியரே பூரணவெற்றியடைவரென்று நாம்காத்திருக்கலாமல்லவா! தெய்வமும் தர்மத்திற்குத் துணை புரியுமேயொழிய அதர்மத்திற்குத் துணை புரியமாட்டாதன்றோ!

*

அகில-இலங்கைச் சைவசமய பாடப்பரீட்சை

சைவசமய சம்பந்தமாகவுள்ள இப்பரீட்சையின் பேற்றையும் வரலாற்றையும் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுள்ளேம். கொழும்பு விவேகானந்த சபையார் சைவசமய விருத்தியின் பொருட்டுச் செய்து வரும் இத்தொண்டு சைவாபிமானிகளெவராலும் பெரிதும் பாராட்டத்தக்கதாகும். சைவசமய நூற் கல்வியைப் பயிற்றல் சைவபாடசாலைகளில் அருகி வரும் இக்காலத்திலே இச்சபையார் செய்யும் முயற்சியினல் சைவ சமய அறிவு சிறிதாயினும் விருத்தியடையுமென்பது எமது நம்பிக்கை. இந்த யாழ்ப்பாணப் பெரும் பிரிவிலே சைவமக்களாலும் சைவ வித்தியா விருத்திச்சபை சங்கங்களாலும் நடத்தப்படும் ஆங்கிலக் கலாசாலைகளும் தமிழ்க்கலாசாலைகளும் மேற்படி இருமொழிக் கலாசாலைகளும் பயிற்றப்படும் கலாசாலைகள் முந்நூற்றுக்குக் குறையாவெனச் சொல்லலாம். ஆனல் இச் சமயபாடப்பரீட்சையிற் பங்குபற்றிய கல்லூரிகளும் ஆங்கிலக் கலாசாலைகளும் தமிழ்க் கலாசாலைகளும் இருமொழியும் ஒருங்கு பயிற்றப்படுவனவாகிய கலாசாலைகளும் சிலசிலவே. இந்த வண்ணார்பண்ணையிலும் இதற்கயலான ஊர்களிலும் சைவக்கலாசாலைகள் பலவுள்ளன. ஆயினும் வண்ணார்பண்ணையிலுள்ள இருவித்தியாசாலைகளிற்றான் இப்பரீட்சையின் பொருட்டு மாணவர் பிரவேசஞ் செய்து சித்தியடைந்ததாகக் காணப்படுகின்றது. ஒன்று சேணியதெரு சன்மார்க்க வித்தியாசாலை, மற்றொன்று வண்ணார்பண்ணை ஞானானந்தவித்தியாசாலை. தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள பல பள்ளிக்கூடங்களின் மாணவர் அதிகமாக இப்பரீட்சையிற் பிரவேசித்துச் சித்தியடைந்திருக்கின்றனர். இப்பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்து சித்திபெறச் செய்த சில கல்லூரிகளின் ஆசிரியர்களையும் சில ஆங்கிலக் கலாசாலைகளின் ஆசிரியர்களையும் அவர்களிடத்துள்ள சமயாபிமானத்தையிட்டுப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

ஏனைய சைவக் கல்லூரிகள் ஆங்கிலக் கலாசாலைகள் தமிழ்க் கலாசாலைகள் இருமொழிக் கலாசாலைகளிலுள்ள உபாத்தியாயர்கள் இந்த மேலான கருமத்தில் ஈடுபட்டு உழைத்தற்கு நேர்ந்த இடையூறென்ன என்பதே நாம் அவர்களைக் கேட்கும் கேள்வி. அதிகாரிகள் நடத்தும் பரீட்சைக்குரிய பாடங்களைப் பயிற்றுதற்கு மாத்திரந்தான் நேரம் போதும், இப்படியான சமயபாடப் பரீட்சைக்குப் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கு நேரம் போதாதென்று உபாத்தியாயர்கள் சமாதானஞ் சொல்வரேல் அது சிறிதும் பொருந்தாது. ஏன்? ஏனைய வித்தியாசாலைகளிலும் வித்தியாதிகாரிகள் பரீட்சைக்குரிய பாடங்களையெல்லாம் படிப்பித்துப் பிள்ளைகளைப்பரீட்சைகளிலும் சித்தியடையச் செய்கின்றார்கள்தானே. சைவப் பள்ளிக்கூடங்கள் பலவற்றிலுள்ள ஆசிரியர்கள் சமயாபிமானமின்றி, வித்தியாதிகாரிகளைப் பிரியப்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாகவிருப்பக் காண்கின்றோம். கல்விவாரம், மலேரியாவாரம், சுகாதாரவாரம் முதலிய வாரங்களிற் பெரும் ஆரவாரஞ் செய்யும் உபாத்தியாயர்கள், இப்படியான சமயக் கல்வியை யூட்டும் விஷயத்திற் பராமுகமாயிருக்கின்றார்கள்; பந்துவிளையாட்டு முதலிய பயனற்ற கருமங்களில் ஆர்வமுள்ளவர்களாயிருக்கிறார்கள்; சங்கீதம் என்று சொல்லிக் கொண்டு துக்கலேயில் ஏதும் விருத்தியின்றி, சுதிலய மின்றிப் பாட்டுப் பயிற்றுவதிலும், அவ்வளவோடு மாத்திரம் நின்றுவிடாமல் ஆண்பிள்ளைகள் பெண்வேஷமிட்டும் பெண்பிள்ளைகள் ஆண்வேஷமிட்டும் நடிப்பதற்குப் பயிற்றி விடுகின்றார்கள்; இப்படியான பயனற்ற செயல்களுக்கும், எங்கள் சாதிக்குந் தேசாசாரத்திற்கும் மாறான கருமங்களுக்கும் இந்த உபாத்தியாயர்கட்கு நேரமுண்டாம். ஆனல் சைவசமயத்திற்குரிய நூல்களைப் பயிற்றி, சமயப் பரீட்சையிற் பிள்ளைகளைத் தேறச் செய்யமாத்திரம் நேரமில்லையாம். பெயரளவில் மாத்திரம் சைவவித்தியாசாலை, சைவஉபாத்தியாயர், சைவமாணவர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்களுக்கும் இவைகளுக்கும் சைவமென்ற அடைகொடுத்துச் சொல்வது உபசார வழக்குப் போலும். ஆனல் சைவகலாசாலைகளில் இன்னுமொரு வகுப்பு ஆசிரியர்களுஞ் சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் சைவர்கட்குரிய பழக்க வழக்க ஒழுக்க மென்னையும் அறியார்கள்; இவர்களை ஆரம்பத்திலேயே சைவப் பெற்றோர் பெற்ற அந்நிய மதத்தினரிடம் கல்விபயில விட்டுவிட்டார்கள்; ஆங்கிலமொழியன்றித் தமிழை அறவே யறியார். தாங்கள் அறியாதவை, தங்களுக்கு விளங்காதவை யெல்லாம் பிழை, எல்லாம் மூடநம்பிக்கை யென்பது தான் இவர்களுடைய கொள்கை. இனி இவர்கள் தமக்கு இன்னபகுதி விளங்கவில்லை, தாம் இன்ன விஷயமாக யாதும் படிக்கவில்லை, தமக்கு விளங்காத விஷயத்தில் தாங்கள் ஏன் பேசத்தலையிடுவான் என்றெண்ணிச் சும்மாவும் இருக்கமாட்டார்கள். தமக்கு விளங்கா விஷயங்களிலெல்லாம் கூசாமற் றலையிடுவார்கள். "ஏன் கன்றும் பாலுங் குடிக்கலாம், முட்டை தின்னக்கூடாதோ? அது பசுப்பால் இது கோழி இடுவது, அல்லாமலும் பாலுக்குப் போலக் கோழி முட்டைக்கும் உயிரில்லைதானே" யென்பார்கள். கடவுள் எங்குமிருக்கிறார்தானே, கோயிலுக்குப் போவானேன்? என்பார்கள். உவையெல்லாம் பொய்யென்பார்கள்; கண்டதைக் காட்டி கொண்டதே கோலமென்பார்கள். இவர்களும் சைவஉபாத்தியாயர்கள் தான்; இவ்விதமென்று சொல்லவில்லை; இவர்களைக் காட்டிலும் நாமறிய முந்தி எடுத்துக் காட்டிய சைவசமயாபிமானமற்ற உபாத்தியாயர்கள் எனி நல்லர் போலும். இப்படிப் பட்டவர்கள் சைவஉபாத்தியாயரெனவிருந்து கொண்டு சைவப்பள்ளிக்கூடங்களிற் சைவப் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டத் தலைப்பட்டால் சைவசமயத்திற்குச் சேதம் பலவுண்டாமென்பதே. கொழும்பு விவேகானந்த சபையிலுள்ள அங்கத்தவர்களுட்பலர் அரசாங்க உத்தியோகத்தர்களெனலாம்; ஆயினும் அவர்களுடைய சமயாபிமானங் காரணமாகவே அவர்கள் அதிக சிரமப்பட்டும் பொருள் செலவிட்டும் இப்படியான சமயப் பரீட்சைகளை நடாத்த முற்பட்டு நிற்கின்றார்கள். இவ்விஷயத்திலே சைவவித்தியாசாலைகளின் ஆசிரியர்களாயுள்ளவர்கள் இச்சபையாருடன் ஒத்துழையாவிடின் என்ன செய்யமுடியும்? நாதரர்பெற்ற உபாத்தியாயர்கள் அதிகப்பட்டிருக்கும் இக்காலத்திலே, எத்தனையோ உபாத்தியாயர்கள் படிப்பித்தற்குப் பள்ளிக்கூடமின்றித் திண்டாடும் இச்சமயத்திலே, சைவவித்தியாசாலைகளின் அதிபர்களாகவுள்ளவர்களும் சைவவித்தியாசாலைகளை நிர்வகித்து நடத்தும் சபைகள் சங்கங்களும், சமயாபிமானமில்லாத உபாத்தியாயர்கள் சலிக்குமாறு படிக்கும் உபாத்தியாயர்களாகிய இவர்களை மெல்ல மெல்ல அகற்றிவிட்டுச் சமயாபிமானமும் சைவவொழுக்கமும் சாதியாசாரமும் முதலிய குணங்களை நிறைந்து செய்கைகளோடு கூடிய உபாத்தியாயர்களைத் தத்தம் வித்தியாசாலைகளில் நியமித்தல் வேண்டும். முந்தி நியோகித்தவர்களை அகற்றுதல் அசாத்தியமெனக் கண்டால் புதியதாக நியமிக்கப்படும் உபாத்தியாயர்களாவது மேலே சொல்லப்பட்டதோர் செயல்களுக்குட்பட்டுள்ளவர்களா என்பதை ஆராய்ந்து நியமித்தல் வேண்டும், சைவப்பெற்றோர் சைவப் பிள்ளைகளைச் சைவப்பள்ளிக்கூடங்களுக்குப் பயில அனுப்பி வைத்தல் வெறும் கல்விமாத்திரம் படிக்கவல்ல என்பதைச் சைவவித்தியாசாலை அதிபர்களும் உபாத்தியாயர்களும் நன்கு உணர்ந்து கொள்ளல் வேண்டும். சைவசமயக் கல்வியூட்டப்படாத சைவப்பள்ளிக்கூடத்தைக் காட்டிலும், தத்தம் சமயநூல்கள் ஊட்டப்படும் வேறு சமயப் பள்ளிக்கூடங்கள் சாலச் சிறந்தனவெனலாம்.

கொழும்பு விவேகானந்த சபையார், மேற்படி பரீட்சைகட்கு வித்தியார்த்திகள் உதவும் கட்டணப்பணத்தைக் கொண்டும் சைவாபிமானிகள் உதவும் பணத்தைக் கொண்டுமே வருடாந்தரமாக திறமையுடன் பரீட்சைகளிற் சித்தியடையும் பிள்ளைகட்குப் புத்தகப் பரிசுகளை வழங்கி வருவதாகவும், அப்பரிசுகளின் விலை 250 ரூபாவரையிலாகுமெனவும், ஆனதாற் பரீட்சைக் கட்டண விகிதத்தைச் சிறிது உயர்த்த வேண்டுமெனவும் தங்கள் விபரப் பத்திரத்தில் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆனல் கட்டணப் பணத்தை இந்த நேரத்திற் சிறிதேனும் உயர்த்துதல் புத்தியாகாது. சைவநூல்களையும் தமிழ் நூல்களையும் அச்சிடும் சில யந்திரசாலைகள் இந்த யாழ்ப்பாணத்தில் உண்டு, வித்தியாபாலனசபை போன்ற சபைகளும் உள்ளன; சைவாபிமானம் பூண்ட புத்தகசாலை அதிபர்களும் இங்கிருக்கின்றார்கள், இப்படியே தென்னிந்தியாவிலும் பல சைவாபிமானிகள் சைவநூல்களை அச்சிடுவித்து வெளியிட்டு வருகிறார்கள்; மேலே சொல்லப்பட்டவர்களுக்கு, தமது விவேகானந்த சபையார் விஷயத்தைத் தெரிவித்துப் பரிசில் உதவும் வண்ணம் தங்கள் தங்களால் இயன்ற பிரதிகளை உதவுதல் வேண்டுமெனக் கேட்டால் அவர்கள் மறுத்தலின்றி மகிழ்ச்சியுடன் அனுப்பி வைப்பார்கள்; [இந்த வியாசத்தை எழுதும் தமியேனுஞ் சில பிரதிகளைக் கிரயமின்றி மேற்படி சைவத்தொண்டின் பொருட்டு உதவுதற்குச் சித்தமாயிருக்கின்றேன்] சபையார் இப்படிச் செய்வரேல் அநேகமாக 75 வீதமான பரிசுப் புத்தகங்கள் கிரயமின்றிப் பெறற்பாலனவாகும். பரீட்சைக் கட்டண விகிதத்தை உயர்த்த வேண்டியும் நேரமாட்டாது. இதனை மேற்படி சபையார் சிந்திப்பார்களாக.

இனி, நமது சைவசமயம் இந்த ஈழநாட்டிலே இலகிற்க வேண்டுமென நாம் விரும்பினால், சைவமாணுக்கரெல்லாரையும் இவ்விவேகானந்த சபையார் வருடந்தோறும் நடாத்தும் இச்சமயப் பரீட்சையிற் சித்தியடையச் செய்தல் வேண்டும். உயர்தர மாணவர்களும் உபாத்தியாயர்களும் சமய அறிவைத் தம் குறைவானவர்களும் சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தார் நடாத்தும் சைவப்புலவர் பரீட்சை, இளஞ் சைவப்புலவர் பரீட்சை யென்னும் இப்பரீட்சைகளிற் பிரவேசித்துச் சித்தியடைதல் வேண்டும். "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற திருவாக்குச் சைவமக்களின் உள்ளத்து என்றுஞ் சான்றும் நிலவுவதாக.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

16-ம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 16 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் 1940 ஆ௵ ஆவணி மாதம் 31ந் திகதி பி. ப. 5 மணியளவில் சேணிய தெருவிலிருக்கும் [illegible] வித்தியாசாலையில் நடைபெற்றது. காரியகர்த்தர்களில் இருபதின்மரும் 300க்கு மேற்பட்ட அங்கத்தினர்களும் சமுகமாயிருந்தனர். தலைவர், தமக்கேற்பட்ட சுகவீனங் காரணமாகச் சமுகங் கொடாமையினால், ஸ்ரீமான் S. R. கனகநாயகம் தற்காலிகமாகத் தலைவராகத் தெரியப்பட்டார்.

கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமானது. ஸ்ரீமான் P. K. சோமசுந்தரம் "வருடாந்தக் கூட்டம் கூட்டவேண்டிய காலத்திற் கூட்டப் பெறுமையால், 1-3-40 தொடக்கம் இதுவரையுள்ள சங்கத்தினதும், நிர்வாகசபையினதும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டு"மென்று பிரேரித்தார் திரு. N. பொன்னையா அதை அனுவதித்தார். தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

15வது வருடாந்த பொதுக் கூட்டத்தினதும், சங்கத்தினதும் அறிக்கைகள் வாசித்து அநுமதிக்கப்பட்டன.

1939-ம் ஆ௵ வருடாந்தக் குறிப்புக்கள் வாசித்து ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தனதிகாரியின் வரவு செலவுக் கணக்குகளைப் பற்றிய குறிப்புக்களும் வாசித்து ஏற்றுக் கொள்ளப்பட்டன.

விலகிய காரிய கர்த்தர்களின் இடங்களை நிரப்புவதற்காக 8 புதிய காரிய கர்த்தர்கள் தெரியப்பட்டனர்.

காரியகர்த்தர்களின் சங்கக் கூட்டம்

வருடாந்தக் கூட்டம் முடிந்ததும், புது வருடத்துக்குரிய காரியஸ்தர்களைத் தெரிதற்காக, காரியகர்த்தர்கள் கூடினர். தலைவரும் உபதலைவரும் சமுகமளியாமையால் ஸ்ரீமான் A. செல்லப்பா தலைவராகத் தெரியப்பட்டார்.

நடபடிக்கைகள் தேவாரத்துடன் ஆரம்பமாயின. காரியஸ்தர்களின் தெரிவு நடைபெற்றது. குறித்த தெரிவு வருமாறு:—

தலைவர்:—டாக்டர் S. சுப்பிரமணியம் J. P

உபதலைவர்:—திரு. A. செல்லப்பா J. P

காரியதரிசி:—திரு S. இராஜரத்தினம், அத்வக்காத்

தனதிகாரி:—திரு A. K. கனகரத்தினம், வழக்கறிஞர்

பாடசாலைகளின் பொது மனேஜர்:- திரு. S. [illegible]

நிர்வாகசபை:—திருவாளர்கள் M. கிருஷ்ணர் J. P, S. R. கனகநாயகர், C. பொன்னம்பலம், K. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (முன்னுள்ள அங்கத்தவர்களோடு மேற்படியாக)

கணக்குப் பரிசோதகர்:— திருவாளர்கள் V. சிவலிங்கம், C. முத்துத்தம்பி

தலைவருக்கும் சென்ற ஆண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் பிரேரணை சபையாரால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது. மாலை ஏறக்குறைய 6-20 மணிக்குத் தேவார பாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

வண்ணார்பண்ணைக் கொலை எத்தன வழக்கு

எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

வண்ணார்பண்ணையிலுள்ள கோம்பையன் மணல் மயானத்தைக் காவல் புரியும் பசுபதி சுப்பிரமணியம் அல்லது சின்னத்தம்பி என்பவர் அல்லூர்ப் பறைய வகுப்பைச் சேர்ந்த சின்னட்டி சின்னப்பன் என்பவனுக்குச் சென்ற 1939ம் ஆண்டு டிசம்பர்௴ 27ந் திகதி ஒரு வில்லுக்கத்தியாற் குத்திக்கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்றீம் கோட்டில் மீளவும் விசாரணைக் கெடுக்கப்பட்டு விசாரணையின் பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியல்லவெனக் கண்டு விடுதலை செய்தார். ந—கி

தந்திச் சமாசாரம்

பேர்லின்நகர்மீது பிருத்தானிய ஆகாயப்படை

பேர்லின் நகர்மீது பிருத்தானிய ஆகாயப் படைகள் வரையின்றிக் குண்டுகள் பெய்து பகைவருக்கு அதிக பொருட் சேதத்தையும் சிலருக்கு ஊறும் விளைத்தனவாம். பிருத்தானியரதங்கள் மூன்று சுட்டு வீழ்த்தப்பட்டனவாம்.

லண்டன்மீது ஜர்மனிய ஆகாயரதங்கள் வெடிகுண்டு இட்டபோது 34 ரதங்கள் மீண்டு வரவில்லையென்றும், பிருத்தானியருக்குரிய 98 ரதங்கள் இராப்பகலாக நடந்த யுத்தத்திற் சுட்டு வீழ்த்தப்பட்டனவென்றும் ஜர்மனியர் தெரிவிக்கின்றனர்.

பிருத்தானிய குறுயிஸர்க்கப்பல தாக்கப்பட்டது

பிருத்தானியருக்குரிய குறுயிசர்க் கப்பலொன்று செங்கடலில இத்தலிய ஆகாயப்படையினற் குண்டிட்டுத் தாக்கப்பட்டதென இத்தலியர் கூறுகின்றனர்.

யுத்தந் தொடங்கி ஒரு ஆண்டு நிறைவேறியது

1939ம் ஆண்டு செப்டெம்பர்௴ 1ந்திகதி தொடங்கியயுத்தம் 1940ம் ஆண்டு ஆகஸ்ற் 31ம் தேதியோடு ஒரு வருஷ எல்லையாயிற்று. குறித்த ஆண்டில் நடந்த சில பிரதானமான சம்பவங்கள் அவ்வத்தேதிகளுடன் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

1939-ம் ஆண்டு செப்டெம்பர்௴ 1ம௳ ஜர்மனியர் போலண்டுமீது படையெடுத்துச் சென்றனர். 3-ம் தேதி பிருத்தானிய பிரான்ஸியர் ஜர்மனியருக்கு பரஸ்பரப் போர்க்கறை கூவியமை. 21ந் திகதி ஹிட்லர் போலண்டைப் பிடித்தமை.

அக்டோபர்மாசம் 6ந் திகதி ஹிட்லர் சமாதானம் பேசியது. 19ந் திகதி பிரான்ஸிய பிருத்தானியர் துருக்கியுடன் பரஸ்பர உதவி உடம்படிக்கை செய்துகொண்டமை.

நவம்பர்மாசம் 7ந்திகதி பெல்ஜிய ஹொலண்ட் அதிகாரிகள் சமாதானம் பேச முயன்றமை. மியூனிஜ் மண்டபத்தில் வெடி வெடித்தமை, ஹிட்லரின் அருந்தப்பு, 30ந் திகதி ருஷியர் பின்லண்ட்மீது படையெடுத்துச் சென்றமை.

1940 ஜனவரிமாசம் 5ந் திகதி பிருத்தானிய யுத்த மந்திரியாகிய L.H. பெலிஷா தம்பதவியினின்று விலகியமை.

மார்ச்மாசம் 13ந் திகதி பின்லண்டிற்கும் ருஷியாவிற்குமிடையே சமாதானம். 18ந் திகதி ஹிட்லரும் முஸோலினியும் கூடியோசித்தமை. 21ந் திகதி பிரான்ஸிய மந்திரியாகிய டலாடியர் தம் பதவியை விட்டு விலக றேனுட் அப் பதவியை வகித்தது.

ஏப்பிரல்மாசம் 9ந் தேதி ஜர்மனியர் நார்வேமீது படையெடுத்துச் சென்றது.

மேமாசம் 10ந் திகதி ஜர்மனியர் ஹொலண்ட்மீதும பெல்ஜியத்தின் மீதும் படையெடுத்துச் சென்றமை. மிஸ்டர் சாம்பர்லேன் தம்பதவியைவிட்டு விலக மிஸ்டர் சேர்ச்சில் பிருத்தானிய பிரதமமந்திரியானது. 14ந் திகதி ஜர்மனியர் ஹொலாந்தைப் பிடித்தது; 27ந் திகதி பெல்ஜிய அரசர் ஜர்மனியரிடஞ் சரண் புகுந்தமை.

ஜூன்மாசம் 10ந் திகதி நார்வே பிடிக்கப்பட்டமை; 11ந் திகதி இத்தலி ஜர்மனியருடன் சேர்ந்து யுத்தத்திற்குப் புறப்பட்டமை; 14ந் திகதி பிரான்ஸியர் ஜர்மனியரிடஞ் சரண்புகுதல்; 15ந் திகதி ருஷியா லிதுவேனியாவிற் படையெடுத்துச் செல்லுதல்; 16ந் திகதி லற்வியா முதலிய ஊர்களில் ருஷியர் படையெடுத்துச் சென்றமை. பிரான்ஸிய மந்திரியாகிய றேனுட் விலக, பெற்றேயின் அப்பதவி வகித்தமை. 17ந் திகதி பிரான்ஸியர் ஜர்மனியரிடம் அடைக்கலம் புகுந்தமை.

கொடிய ஆகாயப்படையுத்தம் 1-9-40.

சென்ற சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பகைவர்க்குரிய ஆகாயப் படைகள் லண்டன் நகரில் அதிகமாக வெடிகுண்டு பெய்தனவெனினும் பிருத்தானிய படைகள் அவற்றை எதிர்த்துச் சமர்செய்து சிலவற்றைச் சுட்டு வீழ்த்திப் பலவற்றைப் புறங்கண்டனவாம். பிருத்தானியஆகாயப்படைகளும் பர்லின் நகரிற் பறந்து சென்று இடைவிடின்றி வெடிகுண்டு பெய்து பலவகையான சேதங்களை விளைத்தன.

ரும்ஸ்கேட் நகரில் 1000 இல்லங்கள் தீக்கிரையாயின

லண்டனுக் கணித்தாகவுள்ள ரும்ஸ்கேட் நகரில் ஜர்மனிய ஆகாயப்படை 500 வெடிகுண்டுகளை யிட்டனவென்றும் அவற்றால் அப்பட்டினத்திலுள்ள ஆயிரம் இல்லங்கள் வரையில் தீக்கிரையாயினவென்றுஞ் சொல்லப்படுகின்றது; ஆனல் அச்சமயத்தில் மாண்டவர்களின் தொகை அதிகமல்லவாம்!

பகைவர் ஆகாயப்படையில் நேர்ந்த சேதம்

சென்ற வாரம் நடைபெற்ற ஆகாயப்படை யுத்தத்திற் பகைவருக்குரிய 298 விமானங்கள் சேதம்போய்விட ஆகாய சமனிகளும் 700 பேர் வரையிற் சிறை பிடிக்கப்பட்டும் மாண்டும் போயினரெனச் சொல்லப்படுகின்றது

பிருத்தானியர்க்குரிய சேதம்

பிரிட்டனைப் பாதுகாப்பதில் 113 விமானங்களும் ஜர்மனியிற் குண்டு இடச் சென்ற விடத்து 15 விமானங்களுஞ் சேதம் போயினவாம்

கேன்ற்கரையில் ஆகாயயுத்தம்

கேன்ற், சறே, எஸெக்ஸ் என்னுமிடங்களிற் பகைவர்க்குரிய ஆகாயப் படை ஒரே நாளில் மும்முறை சென்று தாக்கினவாம்; பகைவருக்குரிய 25 விமானங்கள் சிதைக்கப்பட்டன; பிருத்தானியருக்குரிய 15 விமானங்கள் சேதமுற்றன; சமனிகள் சிலர் தப்பி மீண்டனர்

ஐந்துரூபாவைப் பத்துரூபாயாக்கினராம்

மந்திரத்தின் பேரால் 1,100 ரூபாவைத் திருடினராம்

சோனகதெருவில் வசிக்கும் மீருலெப்பை என்பவருக்கு மீருலெப்பைமுகைதீன் பிச்சை என்னும் ஒருசிறிய தகப்பனுண்டு. இவர்கள் இருவருமாகச் சாவகச்சேரியிற் பழைய பவுண்நகைகள் கொள்வனவு விற்பனைகள் செய்துவந்தார்கள். சிறியதகப்பனர் முட்டுப்பட்டு வந்தார் மீருலெப்பை கொஞ்சப்பணம் தேடிக்கொண்டதாகவும் இப்பணத்திற் சிறியதகப்பனுக்கும் கொடுத்துதவி இருவரும் பங்காகக் கொள்வனவு விற்பனவு செய்தால் நல்லதென்று சிறிய தகப்பனர் மீருலெப்பையிடம் கேட்டதாயும் மீருலெப்பை அதற்கு உடன்படவில்லையென்றமதிக்கிறோம். இதற்குச் சிலநாட்களின்பின் மீருலெப்பை கிட்டிற்கு ஒருமந்திரவாதி சிலரால் அழைத்துச் செல்லப்பட்டாரென்றும் அவரிடத்தில் ஒருதொகையான பணத்தைக் கொடுத்தால் அவர் அத்தொகையை மந்திரத்தால் இரட்டிப்பான தொகையாக்கிக் கொடுப்பாரென்றும் முதல் முறைக்கு ஒரு ஐந்து ரூபா நோட்டைக் கொடுத்துப்பார்க்கும் படி அவர்கள் கூறினதாயும் மீருலெப்பை முதல் முறை ஐந்துரூபா நோட்டைக் கொடுத்தபோது மந்திரவாதி அந்தநோட்டை முன்னமே ஆயத்தஞ் செய்து வைத்திருந்த இரண்டு கண்ணாடித் துண்டுகட்கிடையில் வைத்து அதனைச் சுற்றிக் கட்டித் தூபதீபங்கள் காட்டிச் சாம்பிராணிப் புகையிட்டு மந்திரஞ் செபித்து ஒரு தோற்பெட்டிக்குள் வைத்துப் பூட்டித் திறப்பையும் மீருலெப்பையிடம் கொடுத்து இரண்டு மூன்று நான்கு நாட்களின்பின்னர்தான் அப்பெட்டியைத்திறக்கவேண்டுமென்றும் கூறிச் சென்றவர்கள் திரும்ப இரண்டு, மூன்று, நாட்களால் வந்து மீருலெப்பையைக் கொண்டு பெட்டியைத் திறப்பித்துக் கட்டுகளை அவிழ்க்கச் செய்தபோது கண்ணாடிக்குள் இரண்டு ஐந்து ரூபா நோட்டுகள் காணப்பட்டதாயும் இதனைக்கண்ட மீருலெப்பை இந்த மந்திரவாதிமீது நம்பிக்கை கொண்டு தன்னிடமிருந்த ரூபா 1100 [illegible] டிப்புத் தொகையாக்கித் தரும்படி கேட்கவே மந்திரவாதியும் இசைந்து முன்போலவே அத்தொகையைக் கண்ணாடிக்குள் கட்டி ஒரு பெட்டிக்குள் வைத்துச் சென்று விட்டவர் திரும்பி மீருலெப்பை வீட்டிற்கு வாராமையால் அவர் ஐயுறவு கொண்டு கட்டை அவிழ்த்துப் பார்த்தபோது வெறும் கடுதாசித்துண்டுகளே காணப்பட்டதாக வறிகிறோம். இத்துக்கத்தால் மீருலெப்பை இரண்டு மூன்று நாட்களாகப் படுத்த படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை என்று அறிகிறோம். இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. சார்ஜன் ஜோர்ஜ் இதனை விசாரணை செய்தார். விசாரணையில் கோக்குவிலில் வசிக்கும் கதிர்த்தம்பி-சண்முகத்தையும், விஞசித்தம்பி-பெரியதம்பியையும் மட்டக்களப்பிற் பிடித்ததாயும் கொழும்பில் வசிக்கும் இந்தியா வாசியாகிய அகமேட்டுஞ்சு அப்துல் ஹமீன் என்பவரைக் கொழும்பிற் பிடித்ததாயும் கூறி இன்று இம்மூவரையும் கோட்டிற் கொண்டுவந்து நீதிபதி முன்னிலையில் விட்டு விசாரணையைத்தான் இன்னும் முடித்துக் கொள்ளவில்லை என்றும் இவர்களைப் பிணையில் விடும்படியும் நீதிபதியிடம் கேட்டார். நீதிபதி அவர்களைப் பிணையில் விட்டிருக்கிறார். இவர்கள்மீது பொலிசார் வழக்குத் தொடர்வார்களென வறிகிறோம். ந—கி

நமது கொழும்புக் கடிதம்

✻

சுயராச்சியப் பிரச்னை—நேரடியான பதில்வேண்டும்—மந்திரியின் தடுமாற்றம்—நீர்கொழும்புத் துப்பாக்கிச்சூடு—விசாரணைவேண்டும்

(நமது நிருபர்)

கொழும்பு 1-9-40

பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னந்தனித்து நின்று கொடுங்கோலரான ஹிட்லர் முசோலினி என்பவர்கட்கு எதிராக யுத்தம் ஆற்றுகின்றது. இது ஓர் தர்மயுத்தம்; உலகில் நீதியை நாட்ட, அநீதியை ஒழிக்க, பொதுஜனங்களின் உரிமைகளைப் பாதுகாக்க, எல்லாரும் இன்புற்று இருக்க இந்த யுத்தம் பிரிட்டிஷாரால நடத்தப்படுகின்றது. சுதந்திரத்தை இழந்த செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, நோர்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ், லக்ஸம்பர்க், என்னும் நாடுகளுக்கு மீண்டும் அச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதும் இந்தத் தர்மயுத்தத்தின் லட்சியமாகும். சுதந்திரம் என்பது மனிதன் எவனுக்கும் உரிமையானது. பிரிட்டிஷ்காரனும் பெல்ஜியக்காரனும் சுதந்திரத்தைப் பிறப்புரிமையாகக் கொண்டுள்ளனர், அதேபோலத்தான் சீனாவனும், இந்தியனும், இலங்கையனும் கொண்டுள்ளான். எனவே இச்சுதந்திரலட்சியம் ஐரோப்பியநாடுகளுக்கு மட்டும் பொருந்த நியாயம இல்லை. உலகில் உள்ள எல்லா மக்களும், கறுப்பர்களுஞ்சரி, வெள்ளையரும் சரி, செவ்விந்தியரும் சரி, இச் சுதந்தரத்தை அனுபவிக்கவேண்டும் என்பது நீதி: ஏறக்குறைய காலின் ஒருபாகத்தைப் பிரிட்டிஷார் பரிபாலிக்கின்றனர்; ஆதித்தன் மறையா ஏகசக்கிராதிபத்தியம் என்ற சிறப்புப் பெயர் இந்த ஏகாதிபத்தியத்திற்கு உளது. இதில் அடங்கியுள்ள ஒரு சில தேசங்களைத் தவிர ஏனையாவும் அடிமைநாடுகளே; பிரிட்டிஷாரின் கீழ்ப் பன்னெடுங் காலமாகப் பரிபாலிக்கப்படும் இநாடுகளின் கதி என்ன? இத்தர்மயுத்தம் முடிந்தபின், இவை சுயராச்சியம்பெறுமா?

0 0 0

இலங்கை சம்பந்தப்பட்ட மட்டில் இக் [illegible] நேரடியான பதில் வேண்டும் என்று இங்குள்ளார் யாவரும் அபிப்பிராயப்படுகின்றனர். இப்போதுள்ள நிலைமையில் நாம இராஜவிசுவாசத்தில் மற்றுமெவர்க்கும் இளைத்தவரல்லர் என்பதைத் தலாய்பாயாக நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். எனவே, எமக்குச் சுய ஆட்சி தரவேண்டும். அடிமைத்தனம் ஒழியவேண்டும் என்று இங்குள்ள அரசியல்வாதிகள் கேட்கின்றனர். சிங்களமகா சபை, இலங்கை மகாஜனசபை, இலங்கைத் தேசியக் காங்கிரஸ் என்னும் மூன்று ஸ்தாபனங்களும் இது விஷயத்தில் ஏகோபித்த அபிப்பிராயம் உடையனவாயிருக்கின்றன. சிங்கள மகாசபையைச் சேர்ந்தவரும் தும்பரைத் தொகுதியின் அரசாங்கசபைப் பிரதிநிதியாக உள்ளவருமான மின்னர் சிறிசேனா இது விஷயமான ஓர் பிரேரணையை எடுத்தாளப்போவதாக அரசாங்க சபையில் அறிவித்தல் கொடுத்திருக்கிறார். தமிழ்மக்களின் சார்பாகத் திரு. ஸ்ரீபத்மநாதன் இப் பிரச்னையைச் சென்றவாரம் அரசாங்க சபையில் கிளப்பியுள்ளார். அவருடைய பேச்சு, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்றபடி நேரடியானதாக இருந்தது. "உங்களுடைய நோக்கம் என்ன? இலங்கைக்கும் சுய ஆட்சி தரப்போகிறீர்களா? உங்களுடைய அபிப்பிராயத்தைப் பட்டவர்த்தனமாகக் கூறவேண்டும்" என்று ஸ்ரீமாக். பத்மநாதன் கேட்டார். இந்த நேரடியான கேள்விக்கும், மேலே காட்டியுள்ள ஸ்தாபனங்களின் கோரிக்கைகட்கும் என்ன பதில்கிடைக்கும் என்பதை இப்போதே ஜோசியம் சொல்லிவிடமுடியாது. தமக்குக் கீழ்ப்பட்டுள்ள நாடுகள் விஷயத்தில சந்தர்ப்பத்திற்கேற்ப நடந்துகொள்ளும் அரசியல்ஞானம் பிரிட்டிஷ் இராஜதந்திரிகளுக்குச் சூனியம் என்ற ஓர் அபவாதத்தைப் பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் சூட்டிக்கொண்டிருக்கிறது. 40 கோடி மக்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பிரிட்டிஷ் இராசதந்திரிகள் தமது கத்தாழை மடல் விளக்கெண்ணெய்க் கொள்கையினுல் உதறித்தள்ளி வருகிறார்கள். இந்த வழுவழுக் கொள்கைக்கு ஓர் முற்றுப்புள்ளி போட்டு தம லட்சியத்திற்கேற்றவாறு அவர்கள் நடக்க ஈசன அருள புரியாளுக.

0 0 0

நமது விவசாயமந்திரி மின்னர் சேனநாயக்கா ஒரு நல்ல மனுஷன்; மனப்பூர்வமாக வேலை செய்பவர்; ஆனல் அரசியற்சூட்சிகள் அரசியல்நுட்பங்கள் அவருக்குச் சரிப்போகா என்பதைச் சென்றவாரம் நிகழ்ந்த அரசாங்கசபை விவாதத்தில் அவர் காட்டி விட்டார். அரசாங்க உத்தியோகத்தர் சம்பந்தமாகக் குடியேற்றநாட்டு மந்திரியிடம் இருந்து ஓர் அறிக்கை வந்தது. அதனை வெளியிட அனுமதி கிடைக்கவில்லை; சட்டப்படியும் சம்பிரதாயப்படியும் அப்படியான தஸ்தாவேஜுகளைப் பகிரங்கப்படுத்த வொண்ணுது. அப்படியிருக்கவும், பாவம் மின்னர் சேனநாயக்கா அந்த அறிக்கையில் இருந்து ஓர் விஷயத்தை எடுத்து வாசித்துவிட்டார். அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று பாத்தளைப் பிரதிநிதி மின்னர் அலுவிகாரை கேட்டார், குடியேற்றநாட்டு மந்திரியின் உத்தரவு இல்லாமல் அதனைச் சமர்ப்பிக்க முடியாதென்று மின்னர் சேனநாயக்கா வாதித்தார். அதனை அரசாங்கசபைத் தலைவரும் ஆமோதித்துத் தீர்ப்புக்கூறினர். அத்தீர்ப்புப் பிழை என்று மின்னர் அலுவிகாரை ஓர் பிரேரணையை எடுத்தாண்டார். அது நிறைவேறியது. மந்திரிசபையினர் உட்பட பதினொருபேர் மாத்திரமே அப்பிரேரணைக்கு பாதகமாக வாக்களித்தனர், மற்றவர்களெல்லாரும், அரசாங்கசபையில் வாசிக்கப்பட்ட அந்த அறிக்கையுஞ் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று தீர்ப்புக் கூறினர். விவாதத்திற்கு மறுமொழி கூறிய மின்னர் சேனநாயக்கா தம் பிழையை ஒருவாறு ஒத்துக்கொண்டார்.

0 0 0

நீர்கொழும்பில கத்தோலிக்க வகுப்பைச் சேர்ந்தவர்கள் சிலர் கட்டுப்பிரிந்து கலகம் விளைத்ததும், அதன்பயனுய்ப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும், [illegible] பேர் [illegible] நேர்ந்ததும் யாவரும் அறிந்த விஷயங்களாகும். துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதா அன்றா என்பதைப்பற்றி இச் சந்தர்ப்பத்தில் கூற எமபோல்யாரால முடியாது. நீதிபதி மின்னர் V. E இராசநாரியர் இது சம்பந்தமான விசாரணையை மிகவும் நுணுக்கமாக நடத்தி வருகின்றார். ஆனல், விசாரணையின்போது மேனமரான உதவிப் பொலிஸ் அதிகாரியான மின்னர் தம்பவில்லை என்பவரை விழித்து, "எங்கள் உயிர் போனுலும் சமாதானத்துக்கான எல்லா வழிகளையும் நாம பார்க்கவேண்டும், இனி ஒன்றும் முடியாது. இதுதான் கடைசி என்று கண்டபின் தான் துப்பாக்கியின் உதவியை நாடவேண்டும்" என்று நீதிபதி அவர்கள கூறியமை நீர்கொழும்புப் பொலிசார்க்கு மாத்திரமல்ல, எல்லாப் பொலிசார்க்கும் பொருந்தும். நிற்க, இச் சம்பவத்தைப்பற்றிப் பகிரங்கமாக விசாரணை புரியவேண்டும் என்று ஓர் பிரேரணையைத் தாம் எடுத்தாளப்போவதாக நீர்கொழும்புப் பிரதிநிதியான மின்னர் C. E. P. டீ. சில்வா அரசாங்கசபையில் அறிவித்தல் அளித்திருக்கிறார். தீர்மானம் நிறைவேறுதல் தற்போது விசாரணைபுரிந்துவரும் நீதிபதியின தீர்ப்பையும், தேசாதிபதியின் மனப்பான்மையும் பொறுத்ததாகும்.

காரைநகர் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை

நிகழும் விக்கிரம வரு ஆவணிமீ உ௮ (13-9-40) வெள்ளிக்கிழமை இராவு 8½ மணியளவில் டி வித்தியாசாலைத் திருநாவுக்கரசு நாயனர் மண்டபத்தில் சைவப்பிரசாரகர் ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்கக் கூட்டம் நடைபெறும்.

அத்தருணம் பிரமஸ்ரீ. ச. பஞ்சாட்சர ஐயர் அவர்கள் "சைவபரிபாலனம்" என்னும் விஷயத்திலும், டி வித்தியாசாலை மனேஜரவர்கள் "வித்தியாசாலையின் வருங்காலநிலை" என்னும் விஷயத்திலும் உபந்நியாசஞ் செய்வார்கள்.

அதன் மேல் சமீபத்தில் நடைபெற்ற பொன்விழா நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிக்கை காரியதரிசியாலும், வரவுசெலவுக் கணக்குத் தனாதிகாரியாலும் வெளியிடப்படும்.

சைவசமய அன்பர்கள் யாவருஞ் சமுகந் தந்து இச் சமயபரிபாலன முறையில் ஒத்துழைப்பது இன்றியமையாததாகும்.

—கடித

இலக்கண நூல்உரை

(முதல பக்கத் தொடர்ச்சி)

மனிற் குறுகாது, ஒழிந்த மொழிமுதல் இடைகடை என்னும் மூவிடத்தும், முன்னும் பின்னும் இருமருங்குமாய எழுத்தின்றிருபால், தன்மாத்திரையிற் குறுகும், ஔகாரமும், தன்பெயர் கூறுமிடத்திற் குறுகாது, ஒழிந்த மொழிமுதற்கட் பின்வரு மெழுத்தின் றொருபால் தன்மாத்திரையிற் குறுகும்" என்றார். இங்கே முன் என்பதனை காலமுன்னென்று கொள்வோமாயின் மொழிமுதலெழுத்திற்குக் காலமுன்னும் பிற்படத் தொழுந்தின்மையானும், இடமுன்னெனக் கொள்வோமாயின் பின்னென வேறொன்றின்மையானும் மூன்று மென்றல வழுவேயாமென்க. "எனவே ஓரெழுத் தொருமொழியாய் நில்லொழி வருமொழியாய்த் தொடர்ந்து தனித்து ஓரோவிடத்து யாறின், தன்மாத்திரையிற் குறுகாது" என்பது தற்சுட்டென்பதை நோக்காததாய் மலடி என்றாற்போல் வந்தார் கூற்றேயாமாகலின் அது போலியுரையென விடுக்க. அளபெடுத்து நிற்றலும், எழுத்தாயே மொழியாயே தனிநிற்றலுமல்லா வழி ஐகார ஔகாரங்கள் ஒன்றரை மாத்திரையாய் வருமிடனுமுண்டு, ஒரு மாத்திரையாய் வருமிடனுமுண்டு எனடர் "அளபெடை தனிஈரண்டலவழி யைஔ - வளதா மொன்றரை தனிமையுமாகும்" என்னும் பொருணயஞ் சொன்னமையால் மிக அவிசயக்குந்திரத்தை எடுத்துக்காட்டி "தன்னியல்பாய் இரண்டுமாத்திரையினின்றுங் குறுகுதலிலவையென்று ஒழிப்பார், விகாரத்தால மூன்று மாத்திரையும நான்குமாத்திரையுமாய் மிக்கொலிக்கும் அளபெடையை ஒழிக்கவேண்டாமையின் அதுபொருந்தாதென்க" என்பாரைத், தனபெயர் கூறுமிடத்து குறுகாது மொழிமுதல் இடைகடை என்னும் மூன்றிடத்தும் மொழி முதலின் குறுகு மெனின் ஐகார வௌகாரங்கள் அளபெடுக்கு மென்றற்கு ஆதாரமின்றி யாதெனக் கடாவிடுத்தல் தகுதியேயா மென்க. "அளபெடை தனிஈரண்டு" என்பதில் ஐகார ஔகாரங்கள் மொழி முதல் இடை கடைகளில இயல்பாய் இரண்டுமாத்திரையாய் வருதலும், அளபெடுத்து வருதலும் உள என்பதற்கு ஞாபகமாதலுங் காண்க.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சூத்திரம் ௬. "என, எண்ணிற் பிரிந்து இரண்டிடத்துங் கூடி நிற்ற." என்றார் நச்சினர்க்கினியர். 'நெடி' என்பதைச் சார்ந்து நின்ற 'என்' என்னும் எண்ணிடைச் சொல் 'இமை' என்பதோடுங் கூடிப் பொருட்குருதலின் முன்மொழியோடுங் கூடிநிற்றல் வேண்டும்; அவ்வாறன்றி இரண்டிடத்துங் கூடிநின்று எனல் வழுவேயாமென்க. எண்டு எண்ணிற்பிரிந்து என்பதும் ஆராயத்தக்கதே.

சூத்திரம், கஎ. "புள்ளியில்லா எல்லாமெய்யும் - உயிரைப் பெறுதலாற் புள்ளியை நீங்கிய எல்லா மெய்யும் - அகரமோடு உருவுரு வாகி உயிர்த்தலும் - அகரவுயிரோடு கூடியவழிப் புள்ளியிட்ட வடிவே வடிவாகித் தோன்றுதலும், ஏனையுயிரோடு உருவுதிரிந் துயிர்த்தலும் அக்காமொழிந்த ஏனையுயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டுத் தோன்றுதலுமென, உயிர்த்தலாறு ஆயியல - உயிர் மெய்கள் தோன்றுதல்வகை அவ்விரண்டியல்பை யுடையன என்றவாறு.

பாலர் அபிநயப் பாடல்கள்
(Children's Action Songs)

திரு. ஞா. பா. வேதநாயகம்

அவர்களால் எழுதப்பட்டு இலங்கைத்துரைத்தனக் கல்வி அதிகாரிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது

(Vide Letter 17th July, 1940)

இச்சிறு புத்தகத்தில் காணப்படும் கதைகள் வசனநடையிலும், அபிநயப் பாட்டுகளுடனும் யாவரும் சேர்ந்து பாடுவதற்கு உபயோகமாக எழுதப்பட்டிருக்கின்றன. சில பிள்ளைகள் தமிழில் ஆர்வங் கொள்வதற்காகவும் சில, மனப்பாடஞ் செய்வதற்காகவும்; சில, வேடிக்கைக்காகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அபிநயம் (Action) உரையாடல் (Conversation) நாடகம் (Dramas) படங்கள் (Pictures மனப்பாடம் (Memoritor) சித்திரம் வரைதல் (Drawing) களிமண்வேலை (Clay Modelling) முதலானவை எல்லாக் கதைகளிலும் புகுத்தப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளுக்கும் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

சிந்தாமணி மெட்டுகளை இதில் எதிர்பார்க்கலாம்

கிடைக்குமிடங்கள்

யூனியன் பிரஸ்,
தபால் பெட்டி 362,
கொழும்பு

S. S. சண்முகநாதன்
அன்சன்ஸ்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

H 109 1-9-40—28-2-41

காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலை பொன்விழா

நிகழும் விக்கிரம வரு ஆவணிமீ ௬உ. (22-8-40) வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலையில் பொன்விழா டி வித்தியாசாலைத் திருநாவுக்கரசு நாயனர் மண்டபத்தில ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. பின்னர் மாணவர் அப்பியாசங்கள் நிறைவேறியதும் மாணவர் தேர்ச்சி அறிக்கை பெற்றோருக்குக் கொடுக்கப் பெற்றது. அதன் பின்னர் மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாடல் நடைபெற்றது. அத்தருணம் கிராமச் சீர்திருத்தம் என்னும் விஷயத்தில் டி வித்தியாசாலை மனேஜரால் ஓர் உபந்நியாசஞ் செய்யப் பெற்றது, தலைவர் அவர்கள் குறிப்புரையுடன் அன்றைய நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

இரண்டாவது தினமாகிய (23.8.40) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில், தலைவராக நியமிக்கப் பெற்றிருந்த கௌரவ சேர். துரைசுவாமி அவர்கள் வர இயலாதிருந்தமையால், ஆங்குச் சமுகமாயிருந்த நியாயவாதி திரு. கா. அருணசலம் J. P. அவர்கள் தலைவராக நியமிக்கப் பெற்று அவர்கள் தலைமையில் கொண்டாட்டம் தேவாரபாராயணத்துடனாரம்பமாயது. ஆரம்பத்தில் வித்தியாசாலை மனேஜரவர்கள் வரவேற்புக் கூறியபின், தலைவர் அவர்கள் சிறந்த தேசத்தொண்டரென்றும், தமது காலத்தைத் தேச சேவையில் செலவழித்து வந்தாரென்றும், அத்தகைய ஒருவர் தலைவராக வந்தமை போற்றப்படக் கூடியதென்றும், இவ்வாறான பல தேசத்தொண்டர்களிருப்பதனுலும், கைத்தொழிலபிவிருத்தியினுலும் தான் ஒரு தேசம் முன்னேற்றமடையுமென்றுங் கூறினர். பின்னர் பாடசாலைப் பொன்விழா வாழ்த்துப்பா பழைய மாணவர் ஒருவரினுல் படிக்கப் பெற்றதும் வித்தியாசாலை மனேஜரால் தயாரிக்கப் பெற்ற அறிக்கையும், வரவு செலவுக் கணக்குப் பத்திரமும் வெளியிடப்பட்டன. அதற்கடுத்த நிகழ்ச்சியாக உதவிப்பதிவு காரியஸ்தர் திரு. C. இரகுநாதன் அவர்கள் "ஐக்கிய முன்னேற்றம்" என்னும் விஷயத்திலும், மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் வீ. வீரசிங்கம் B. A அவர்கள் "கைத்தொழில் முன்னேற்றம்" என்னும் விஷயத்திலும் சிறந்த பிரசங்கங்கள் செய்தனர் ஈற்றில் தலைவர் குறிப்புரையுடன் ஸ்துதி கூறப்பட்டதும் தேவாரபாராயணத்துடன் இரண்டாவது தினக் கொண்டாட்டம் இரவு 9 மணியளவில் இனிது நிறைவேறியது.

மூன்றாவது தினம் (24-8-40) சனிக்கிழமை மாலை 6 மணி யென்னத் தலைவர் ஸ்ரீமாக். சு. நடேசபிள்ளை B. A, B. L, F. R. E. S, M. S. C அவர்கள் தலைமையில் தேவாரபாராயணத்துடன் பரிசளிப்புக் கூட்டம் ஆரம்பமாயது. ஆரம்பத்தில் மனேஜரவர்களால் வரவேற்பு உபந்நியாசஞ் செய்யப்பெற்றதும், பாடசாலைப் பொன்விழா வாழ்த்துப் பாட்டுப் படிக்கப் பெற்றது. பின்னர் மாணவர் அப்பியாசங்கள் நடைபெற்றன, தலைமை ஆசிரியரால் பாடசாலை அறிக்கை வாசிக்கப்படலாயிற்று. மாணவர்களுக்குக் கொடுக்கப் பெறும் பரிசுகளின் பெறுமதி நாம் பிருத்தானிய இராச்சியத்தில் கொண்டுள்ள இராச விசுவாசத்தைக் காட்டும் நோக்கமாக வெகு விரைவில் வெற்றியுண்டாக வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் தலைவர் அவர்கள் மூலமாக யுத்த நிதிக்குச் சேருமாறு மாணவர்களின் பேரால் சமர்ப்பிக்கப் பெற்றது. இவ்வாறு பொருளுதவிய நற்செய்கையை மெச்சித் தலைவர் அவர்கள் யுத்தத்தைப் பற்றியோர் நீண்ட சொற்பொழிவாற்றினர். பரிசில் பெறும் மாணவர்களுக்குத் தகுதிப் பத்திரங்கள் வழங்கப்பெற்ற. பின்னர் வித்தியாதரிசி திரு வே. கதிரவேலு அவர்கள் 'தமிழ்க்கல்வி' என்னும் விஷயத்திலும், இந்துசாதன உதவிப்பத்திராதிபர் திரு. க. வி. நடராஜா அவர்கள் "திருவாசகமும் திருக்கோவையாரும்" என்னும் விஷயத்திலும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் 'நம் இளைஞரின் சமயநிலை" என்னும் விஷயத்திலும் சிறந்த பிரசங்கங்கள் செய்தனர். இறுதியில் மனேஜரவர்களால் வந்தனோபசாரங் கூறப் பெற்றதும் இரவு 9 30 மணியளவில் தேவாரபாராயணத்துடன் மூன்றும்நாட் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

நான்காவது தினம் (25-8-40) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் ஸ்ரீமதி சிவகாம சுந்தரி நடேசபிள்ளை அவர்கள் தலைமையில், தமிழ்மறை ஓதுதலும், நாடகமும் நடைபெறலாயிற்று. ஆரம்பத்தில் மேளவாத்தியமும், பின்னர் விசேஷ ஆராதனையும் நடைபெற்றன. தேவார வகுப்பு மாணவர்களால் பல அப்பியாசங்கள் செய்யப்பெற்றன, அதன் பின்னர் ஸ்ரீமாக் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் பக்க வாத்தியங்களுடன் சிறந்த தேவாரக் கச்சேரி நடைபெற்றதும், பாடசாலை மாணவர்கள் பக்திரசமுள்ள "திருநீலகண்டர்" என்னும் நாடகத்தை நடித்தனர். இறுதியில் வட்டுக்கோட்டை S. அண்ணுமலை அவர்கள் குறிப்புரை கூறுகையில், பாடசாலை மாணவர்களால நிகழ்த்தப்பெற்ற அப்பியாசங்களைப் புகழ்ந்து கூறி, இவ்வாறு சைவப் பாடசாலைகளில் சைவப்பிள்ளைகளனைவரும் பயனடைதல் வேண்டுமென்றும், இதிலுள்ள பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் இவ்வரிய செல்வத்தைப் பெறுதல் விழைகின்றனரென்றும், இப்பாடசாலை அதிக காலம் வாழ்ந்து வருதல் வேண்டு மென்றுங் குறிப்புரைத்த பின்னர் ஸ்துதி கூறுதலுடன் நான்காம்நாட் கொண்டாட்டம் இரவு 9.30 மணியளவில் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சுபம்!

காப்புத்திருடன் குற்றத்தை ஒப்புக் கொண்டான்

எதிரி விளக்க மறியலில் வைக்கப்பட்டான்

தற்போது மதவாச்சியில் வசிக்கும கறுப்பையா—சுப்பையா வென்னும் இந்தியன் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் சென்ற ரேப்டம்பர் 1ந் திகதி பூநகரியிற் கொல்லகுறிச்சியைச் சேர்ந்த சதாசிவம் கைம்பெண் செல்லம் என்பவரின் குழந்தையின் ரூபா 15 பெறுமதியான ஒரு காப்பைக் களவாகக் கழற்றினதாகக் குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் பதில் நீதிபதி திரு. R. R. நல்லையா முன்னிலையில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது.

நீதிபதி சுப்பையா-ஐயாத்துரையின் வாய்முறைப்பாட்டைப் பதிவு செய்தபின்னர் எதிரிமீது களவெடுத்ததாகக் குற்றஞ்சாட்டியபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டான். நீதிபதி எதிரியைக் கையடையாளம் கொடுக்கும்படி கூறி அவனை வருகிற 7-9-40ம் திகதி வரையும் விளக்க மறியலிலிருக்கும்படி கட்டளையிட்டார். ந-கி

சுகாதாரக்காட்சி

நிகழும் 1940-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ம் 6ம் 7ம் தேதிகளில் இலங்கை வைத்திய சுகாதாரப்பகுதியாரால் தன்னல ஐக்கிய மகாசபையின் ஆதரவின் கீழ்க் கட்டைவேலிமெதொடிஸ்தமிஷன் வித்தியாசாலையில் ஓர் சுகாதாரக்காட்சி நடத்தப்படும். இக்காட்சி பருத்தித்துறைப்பகுதிச் சுகாதார பரிசோதகர் திரு. P. நடேசன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெறவிருக்கும் கிராமச் சுகாதார பெருமுயற்சியின் முற்கூறு ஆகும்.

இக்காட்சி புரட்டாதி மாதம் 5ந்தேதி வியாழக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு வடமாகாண அதிபர் திரு. M. பிரசாத் அவர்களாற் திறந்து வைக்கப்படும். இம்மூன்று நாட்களிலும் உபந்நியாசங்களும், படக்காட்சிகளும், நடித்தல்களும் நடைபெறும். இக்காட்சிகளில் தேயிலை விருத்திச் சங்கத்தாரினதும், பொருள் கொள்வனவு விற்பனவுச் சங்கத்தாரினதும், பல் வைத்தியர்களினதும் இரதங்கள் (Vans) சமுகமளிக்குமென எதிர்பார்க்கின்றோம்.

உபந்நியாசங்களின் அட்டவணை

5-9-40 தலைவர் திரு. S. பெரியதம்பி அவர்கள் (வடி ஐக்கிய மகாசபைத்தலைவர்)

உபந்நியாசம்: "கிராமச் சுகாதாரம்" Dr. S. C. துரைராசா அவர்கள் (யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்)

6 9-40 தலைவர்: திரு. N. வேலுப்பிள்ளை அவர்கள் (வடமராட்சி மணியகாரன்)

உபந்நியாசம் (1) "பாடசாலைச்சிறுரின் ஆரோக்கியமும் பெற்றோரின் கடமையும்" Dr. K. கனகரத்தினம் அவர்கள் (யாழ்ப்பாணம் பாடசாலை வைத்திய உத்தியோகத்தர்)

(2) "கூட்டுறவும் சுகாதாரமும்" திரு C. இரகுநாதன் அவர்கள் (ஐக்கிய சங்க உதவிப்பதிவு காரியஸ்தர்)

7-9-40 தலைவர். திரு. G. G. பொன்னம்பலம் அவர்கள் (பருத்தித்துறைப் பகுதிப் பிரதிநிதி)

உபந்நியாசம் (1) 'வீட்டு மிருக வளர்ப்பும், மனிதரின் சுகவாழ்வும்" Dr. V. A கூல் அவர்கள் (யாழ்ப்பாணம் மிருக வைத்தியர்)

(2) "சுகாதாரப் பழக்க வழக்கங்கள்" திரு. P. நடேசன் அவர்கள் (பருத்தித்துறைச் சுகாதாரப் பரிசோதகர்)

அங்கும் இங்கும்

(நகர சஞ்சாரி)

புகையிலை நிபுணர் எங்கே

இற்றைக்கு 3 வருஷங்களுக்கு முன் எங்கேயிருந்த ஒருவரைப் புகையிலை நிபுணர் என இலங்கை சர்க்கார் உத்தியோகத்தில் அமர்த்தினர். இலங்கையில் உள்ள புகையிலைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கே இந்நிபுணர் அமர்த்தப்பட்டார் இலங்கைக்கு வந்த சில நாட்களின் பின்னர் ஜெரேஜர்ன் என்னும் பெயருடைய இந்த உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, புகையிலைத் தொழிலில் சிரத்தை கொண்டுள்ள சிலரைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்டார். ஆலோசனை கேட்டவுடன் அவர் தமது கடமையை முடித்துக் கொண்டு ஜென்மதேசம் திரும்பிவிட்டனர் என்றே எண்ணியிருந்தேன். ஆனல் அவர் இப்போதும் இலங்கையில் தான புகையிலை நிபுணர் என்னும் உத்தியோகத்தராகவே இருக்கிறார்; அவருடைய பதவியை ஸ்திரமானதாக்கி அவர்க்குப் பென்ஷன் கொடுக்கத்தக்க ஓர் திட்டத்தையும் விவசாய மந்திரியார் தயாரித்து வருகின்றார் என்னும் செய்தி பத்திரிகைகளில் இப்போது வெளிவந்திருக்கிறது. மின்னர் ஜெரேஜரஸ் இதுவரையும் செய்துள்ள வேலைகள் என்ன? இயற்றிய ஆராய்ச்சிகள் யாவை? புகையிலைத் தொழிலை நம்பியிருந்து அத்தொழிலின் ஈன நிலைமையினுல் அவதியுறும் யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்துள்ள சலாக்கியங்கள் என்ன? என்னும் இன்னேரன்ன வற்றைப் பற்றி யாரேனும் விளக்குவார்களா? இந்தப் புகையிலை நிபுணர் இருந்தும் புகையிலைத் தொழிலும், அதனுடன் தொடர்புள்ள சுருட்டுத்தொழிலும் இவ்வளவ கேவல நிலைமையை எய்தக் காரணமென்ன!

'யதார்த்த மொழிகள்'

நம் நாட்டில் உண்மையான தலைவர்கள் இல்லாக் குறையை இப்பத்திரிகையில் அடிக்கடி எழுதி வந்திருக்கிறேன். இதனை நம் சுகசபைத் தலைவர் ஸ்ரீமான். சு. பொன்னம்பலம் அன்று நிகழ்ந்த ஓர் பொதுக் கூட்டத்தில் ஆணித்தரமாக வற்புறுத்திக் கூறியுள்ளார். நாட்டின் நிலைமையை ஓர்ந்து, அதற்குத் தக்க பரிகாரங்களைத் தேட முயற்சிக்காது, ஒன்றுக்கும் பயன்படா அரசியல் விவகாரங்களில் மண்டையை யுடைத்துக் கொள்வதை ஸ்ரீமான். பொன்னம்பலம் கண்டித்து இருப்பது சமையோசிதமானதே. ஆனல் நம் தலைவர்கள் என வெளிக் கிளம்புவோர் இத் யதார்த்த மொழிகளைச் செவிமடுப்பாரா? உண்மையான ஜனசமூகசேவை—அதாவது பயன்கருதாது பொது ஜனங்களின் நல்விருத்தி நோக்கிச் செய்யும் சேவையே தேசாபிமானத்தின் சிறந்த அறிகுறியாகும். நமநாட்டில் ஜனசேவை செய்வதற்கு எவ்வளவோ சாதனங்கள் உண்டு. கல்வியின்மை—அறிவின்மை என்பவற்றைப் போக்க வேண்டும். பழைய சுகாதார முறைகளை நம்மவர் கைவிட்டு விட்டனர். அவற்றைப் பின்பற்றும்படி போதித்து வரல்வேண்டும். ஆண்டுதோறும் கலாசாலைகளில் இருந்து புறப்படும் ஆயிரக்கணக்கான நம் வாலிபர் வேலையில்லாது தெருத் தெருவாய்த் திரிவதைத் தடுக்க அவர்கட்கும் கைத்தொழிற்சாலைகள் ஸ்தாபித்துக் கொடுத்தல் வேண்டும். தமிழ் மக்கள் தம் தொன்மையை மறந்து கேவலம் கோழைகளாகி விட்டனர்; அவர்களுடைய சுயமரியாதை, தேசபக்தி, சமயபக்தி என்பவற்றைப் பறிக்கும் தன்மை வாய்ந்த பொருளாதார நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனைத் திருத்த வேண்டும். இவற்றை நம் தலைவர்கள் என முன்வருவோர் செய்வார்களா? யார் முன்வருவார்.

பாராட்டுகிறேன்

நல்லூர் உற்சவத்தின்போது, அதிகாரிகள் எடுத்தாண்ட முறைகளை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. கோயில் தெரிசனம் செய்வோர்க்கும் விரதகாரர்க்கும் சென்றுவரும் ஒழுங்குகளில் இடைஞ்சலாக இருந்த தெருவோர விற்பனை இடங்களை இவ்வாண்டில் நம் நகரசங்கத்து அதிகாரிகள் அகற்றி ஓர் ஒதுக்கிய இடத்தில் வைத்து விட்டமை பாராட்டற்குரியதாகும். சுகாதார விஷயமான ஓர் பொருட்காட்சியையும் நகரசங்கமும் சுகாதார வைத்தியப் பகுதியும் சேர்ந்து நிகழ்த்தியதும் நன்மை பயப்பதாகும். இப்புதிய நல்ல திருத்தங்களுக்கெல்லாம் காரணராகவுள்ள நகரசபைத் தலைவரையும், சுகாதார அதிகாரி டக்டர் துரைராசாவையும் பாராட்டுகின்றேன்.

மூலேயா எதிரொலி

கோவிந்தன் இறந்தான்; அவன் குரூரமாகத் துப்பாக்கியினுல் கொலை செய்யப்பட்டு இறந்தான்; அவனைக் கொன்றவர் ஓர் பொலிஸ் சார்ஜன்ற்; அந்த சார்ஜன்ற் நல்லநோக்கம் கொண்டு சுட்டார்; ஆனுலும் கோவிந்தனைக் கொன்றமை பிழை என்று மூலேயா விசாரணைக் கர்த்தரும் தீர்ப்பளித்து விட்டார். ஒரு பொலிஸ் சேவகனின் பிழையினுல் ஒரு தொழிலாளி இவ்வுலகத்தை விட்டு ஒழிந்தான்; ஆனல் அவனை நம்பி எதிர்பார்த்திருந்தவர்களின் நிலைமை என்ன? அவர்களுடைய கதி என்ன? சார்ஜன்ற் சுவாமி செய்த பிழைக்காக அவர்கள் சாவதமாகவாடுவதா? வருந்துவதா? அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பவர் யார்? அரசாங்கத்தாரா? அல்லது சார்ஜன்ற் சுவாமி என்பவரா? அரசாங்கத்தார் இக்கேள்விகளுக்குப் பதில் கூறுவாரா?

எழுவது?

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் 16-வது ஆண்டு அறிக்கை வெளிவந்திருக்கிறது. தளரா ஊக்கம், வற்றாத நம்பிக்கை என்பன இவ்வறிக்கையிற் காணப்படும் அம்சங்களாம். இலங்கையில் மிகப் பெரிய வித்தியா பரிபாலனச் சங்கமாக இது திகழ்கின்றது என அறிக்கையிற் கூறப்பட்டிருக்கிறது. இந்துக்களாயுள்ள எவர்க்கும் இச்செய்தி பெருமிதத்தையும் ஒருவித உற்சாகத்தையும், எதிர்காலத்தில் அபார நம்பிக்கையையும் கொடுக்க வல்லதுமென்பதற்கு ஐயம்இல்லை. ஆனல் ஒரு குறையும் இவ்வறிக்கையிற் காட்டியிருக்கிறர்கள்; இந்த ஸ்தாபனத்தில் உள்ள கல்வி நிலையங்கள் இன்னும் நூறு ஆகவில்லையே என்பதுவே அது. தொண்ணூற்றொன்பது கல்வி நிலையங்களைச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் தற்போது நடாத்துகின்றது. சீக்கிரம் நூறுவது ஸ்தாபனம் பூர்த்தியாக வேண்டும். அதுவும் இவையாவற்றிலும் சிறந்ததாகவும் வேண்டும்; அதுதான் ஹிந்துப் பெண்கள் கல்லூரி. இந்த யாழ்ப்பாண நகரத்திலே, இலங்கை ஹிந்துக்களின் பிரதானமான ஸ்தலத்திலே, நம் எதிர்காலப் பெண்மணிகளுக்கு எமது ஹிந்து முறைப்படி கல்வி யூட்டத்தக்க ஓர் கல்வி நிலையம் இல்லை என்றால் இதுயாருக்கு வெட்கம்! ஹிந்துக்களாய நாங்கள் எல்லாரும் வெட்கித் தலைகுனிய வேண்டாமா! அந்நிய மதத்தினர் பலவேறு பெண்கள் கல்லூரிகளை இந்த யாழ்ப்பாண நகரில் வைத்து நடத்துகின்றார்கள்; இனியாவது ஹிந்துக்கள் சற்றுக் கண்விழிப்பார்களாக. இந்த ஹிந்துப் பெண்கள் கல்லூரியை ஸ்தாபிக்க முன்வருவாராக. அபிமானம் வேண்டும். ஒற்றுமைதானே உண்டாகும். ஒற்றுமைகொண்டு இம்மேலான கைங்கரியத்தைத் தொடக்கி நடாத்த வம்மின்! அடுத்த ஆண்டு அறிக்கையில், 'யாழ்ப்பாணம் ஹிந்துப் பெண்கள் கல்லூரி" என்பது ஸ்தாபிதமாகிச் செவ்வனே நடைபெறுகிறதென்று வாசித்து ஹிந்துக்களாயுள்ளார்யாவரும் பெருமிதம் அடையச் செய்யும் பொறுப்பு எம்மனைவோரையும் பொறுத்ததாகும். சைவவித்தியா விருத்திச் சங்கத்து அதிகாரிகளும் இந்த நூறுவது ஸ்தாபனப் பூர்த்தியைத் துரிதப்படுத்துவார்களாக.

பல்வைத்திய விளம்பரம்

யப்பானியப் பல் வைத்தியரான [illegible] இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்வம்பில்டிங்கில் 1940-ஆ செப்டம்பர்மீ 7-உ தொடக்கம் 13-ந் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்.

(Mis 108, 5-8 40)

புதிய பொலிஸ் தானங்கள்

ஆனைக்கோட்டையில் யாழ்ப்பாணம்—மானிப்பாய்த் தெருவில் 3-ம் மைலுக்கணித்தாக ஒரு கிளைப் பொலிஸ்தானமும், கோப்பாயில் யாழ்ப்பாணம்—பருத்தித்துறைத் தெருவில் ஒரு கிளைப் பொலிஸ்தானமும் சென்ற திங்கட்கிழமை (2-9-40) ஸ்தாபிக்கப்பட்டன.

வாய்மையுடைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லவேண்டும்; உண்மையை எச்சமயத்திலும் எவ்விடங்களிலும் பேசவேண்டும் என்ற நியதியையும் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது.

வடமொழியும் தென்மொழியும் வல்ல பெரியார் ஒருவர் கூறின மொழிகளைக் கருத்தில் யாவரும் வைக்கலாமென்று எண்ணி அவர் மொழிகளைச் சொல்லுகிறேன், "சத்தியமானது எல்லா ஜீவர்களுக்கும் க்ஷேமகரமாக இருக்கவேண்டும். காமத்தினாலும் குரோதத்தினாலும் சத்தியம் வரக்கூடாது. ஒருவனுடைய குற்றத்தை எடுத்துச் சொல்லித் துவிக்கவேண்டும்; அவனுடைய பெருமையைக் குறைக்கவேண்டும் என்ற ஆசையோடு சொல்லப்படும் வார்த்தைகள் உண்மையானவைகளாக இருந்தாலும் சத்தியமல்ல. சத்தியத்தால் ஒருவனுக்குத் தாபம் உண்டாகக்கூடாது. கஷ்டம் உண்டாகக்கூடாது. தமக்காவது வேறு பிராணிக்காவது க்ஷேமத்தை உண்டாக்கவேண்டும். அப்படியுள்ள சத்திய வார்த்தைகளையும் சொல்லும்போது சாந்தமாகச் சொல்லவேண்டும். கேட்பவர்களுக்கு அவை இதமாக இருக்கவேண்டும். இவை வாக்கினால் சொல்லப்படும் சத்தியம். பொய்சொல்ல நினைக்கக்கூடாது. திரிகரணங்களாலும் சத்தியமாக இருக்கவேண்டும்.

—சித்தாந்தம்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரூப்ஸைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 50. 3-4-39 3-3-41

மனோவியாதி ஆஸ்பத்திரிக்கு 3 லக்ஷ ரூபா

கடன்கோரி அரசாங்கசபையில் தீர்மானம்

மந்திரிசபையின் அங்கீகாரம்

புதிய மனவியாதி ஆஸ்பத்திரியொன்றை நிர்மாணிப்பதற்காகச் சுகாதார மந்திரிசபை அமைத்துள்ள திட்டத்தின் பூர்வாங்கமான வேலைகளைச் செய்வதற்காக 3,00,000 ரூபா கடன் கொடுக்கும்படி கோரி அரசாங்கசபையில் ஒரு கடன்தீர்மானத்தைக் கொண்டுவர மந்திரிசபை அங்கீகாரமளித்துவிட்டதென்று அறியப்படுகிறது.

குறித்த ஆஸ்பத்திரி நிர்மாணிப்பதற்குக் களுத்துறை டிஸ்திரிக்கைச் சேர்ந்த பெலவத்தை என்னுமிடத்தில் ஸ்தலம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

கைதிமீது கொலைக் குற்றச்சாட்டு

மற்றொரு கைதியை உளியாற் குத்தினாராம்

விசாரணை சுப்றீம்கோட்டுக்கு விடப்பட்டது

கண்டி, ஆக 31

போகம்பரைச் சிறைச்சாலையைச் சேர்ந்த சட்டின் அப்புஹாமியென்னும் வாலிபக் கைதி அவரது சககைதியான பண்டிதாலா என்பவரின் பரிகாசத்தினால் ஆத்திரமடைந்து அவருக்கு மரணம் சம்பவிக்கத் தக்க விதமாய் உளியாற் குத்திவிட்டாரென்று சொல்லப்படுகிறது. சட்டின் அப்புஹாமிமீது கொலைக்குற்றஞ் சாட்டிக் கண்டிப் பொலிஸ்கோட்டில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிபதி எதிரியைச் சுப்றீம்கோட்டு விசாரணைக்குப் பாரங் கொடுத்திருக்கிறார்.

குறித்த சம்பவம் ஆகஸ்ட்மாசம் 6ம் திகதியன்று போகம்பரைச் சிறைச்சாலையைச் சேர்ந்த தச்சுவேலைப் பட்டறையில் நிகழ்ந்தது. சம்பவத்தின் பின்னர் பண்டிதாலா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு இரு தினங்களுக்குப் பின்னர் மரணமானார்.

வழக்கு விசாரணையின்போது, சிறைச்சாலையைச் சேர்ந்த பல அதிகாரிகள் சாட்சியங் கூறினார்கள்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு மு. க. நா. முத்து பொன்னையா கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல.	தி.	ரு.	ஊர் பெயர் நகைகளின் விபரம்
1938ம் ஆண்டு 11ம் மாதம்			
2278	18	30	சோனகதெரு S. கச்சுமுகம்மது ஒன்றுக்கு ஒருகல் விழுந்த இமி தோடு சோடி 1, டை கல் அச்சாக்கூடு 1, நாக்கணம் இல்லாத சிமிக்கி வாளி சோடி 1
1039ம் ஆண்டு 1ம் மாதம்			
2437	1	80	சோனகதெரு அ. பஞ்சாட்சரம் பழுது கம்பிப்பூரான் அட்டியல் 1
4ம் மாதம்			
2748	3	70	சோனகதெரு S. கச்சுமுகம்மது திருகில்லாத கம்பிப்பூரான் அட்டியல் 1
2807	20	14	சோனகதெரு M. அப்துல்காதர் அரும்புத் தடை 1 பழுது தாலி ஒன்று
5ம் மாதம்			
2868	4	13	சங்கானை க. செல்லமுத்து பெட்டிமோதிரம் 1, இமிற்கல் சிறு தோடு சோடி 1
2871	5	6	நவாலி தெற்கு ச. அப்பாத்துரை கசிவு பெட்டி மோதிரம் 1
6ம் மாதம்			
2972	4	38	நெடுந்தீவு மேற்கு சி. முருகேசு குண்டுச்சங்கிலி ஒன்று
3030	18	75	மானிப்பாய் ம. முத்தையா வயிரச்சன்னம் 6 கட்டிய தோடு சோடி 1
3051	23	10	நல்லூர் கா. சபாரத்தினம் கல்விழுந்த தோடு சோடி 1
3066	27	9	நாவாந்துறை ம. யோசப்பு கசிவு ஆடித்தன் மோதிரம் 1
7ம் மாதம்			
3088	5	25	காவாந்துறை ம. தம்பிராசா இமி முத்து சிலேட் 1
3109	11	7	சோனகதெரு M. S. A. முகியதீன்பிச்சை இமிகல் S மோதிரம் 1
3148	23	18	புத்தூர் கிழக்கு ச. ராமய்யா பின் முகப்பு 1
3189	31	18	,, ,, கல்விழுந்த கவுத்தோர் 1, இனபொன் கவுத்தோர் 1
8ம் மாதம்			
3218	7	10	வண்மேற்கு மு. மயில்வாகனம் இமி கல் தோடு சோடி 1
3223	7	16	மானிப்பாய் அ. சுப்பிரமணியம் பெட்டி மோதிரம் 1
3241	16	8	நாவாந்துறை ம. தம்பிராசா ஒருகல் விழுந்த இமி கல் தோடு சோடி 1

விற்பனவு: நிகழும் விக்கிரம வருஷம் புரட்டாசி மாதம் 3ந் திகதி (19-9-40) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறசிங்கலாக மிருதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. துயம்பிள்ளை,
வெத்திஸ் மேஸ்தர்.

(Mis 105, 5 & 9-9-40.

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)

பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சைக் வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய **திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள்** மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம்)
20-8-40)

மனேஜர்.

பிரபல வைத்தியாசிரியர்

யாழ்ப்பாணம் விஜயம்

பழனி மலையப்பசாமி வைத்தியசாலையின்
அதிபரும் பிரதான வைத்தியருமான

வைத்தியாசிரியர் **C. P. சாமி**
F. A. M. அவர்களும்
உதவி வைத்தியர்
S. கிஷ்ணன் R. I. M. P.
அவர்களும்

யாழ்ப்பாணத்திலுள்ள கிழக்கண்ட தமது கிளைவைத்திய நிலயத்தில் தங்கி உள்ளார்கள்

நேரில் சந்தித்து உங்கள் நோயைப்பற்றி ஆலோசனை செய்யுங்கள்

நாடிப்பரீட்சை இனாம்!

டாக்டர் C. P. சாமி F. R. M. அவர்கள் என்னுடைய நாடியைப் பரீட்சித்து, சரியாக தமது சுகயீனத்தைக் கூறினார். அவரின் அநுபதங்கள் அவர் கூறிய பிரகாரம் குணக்களைக் கொடுத்து வந்தன. ஆகையால் அவரின் மருந்துகள் மிக்க குணமுள்ளன என்றும், எனக்கு முழுச் சுகத்தைக் கொடுத்தன என்றும் உறுதியாய்க் கூறுவேன். நடிப்பு, சொறி முதலிய தோல் சம்பந்தமான வெளிநோய்களுக்குற்ற (தாம்பிர பஸ்பத்தின்) திறனையும், சுறுசுறுப்பையும் அபார தைரியத்தையும் கொடுக்கவல்ல (நவ பஸ்பத்தின்) மகிமையையும் வர்ணிப்பது மிகையாகும். அவை ஆச்சரியமானவை.

கொக்குவில்
4—8—40

S. ஆறுமுகம்,
இங்கிலீஷ் உபாத்தியாயர்.

மலையப்பசாமி வைத்தியசாலை,
கிளை:- கதிரேசன்கோவிலடி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
30-7-40

Q 89 1-8-40—31-10-40

திறமான போர்டென்ஸ்

மோல்டட்மில்க்

வெகுநேர்த்தியான பானம்

சாப்பிடுவதற்கு ருசிகரமானது

சரீரத்திற்குச் சுகமானது

இது ஒருபுதிய நூதனமுறையில் தயாரிக்கப்பட்டதும் விட்டமின் A. B G. அடங்கியுமுள்ளது

தூக்கமின்மை சோர்வு இவைகளால் வாதைப்படுபவர்கள், தூக்கப்போவதற்கு முன், போர்டென்ஸ் மோல்டட் மில்கைச் சாப்பிட்டு விட்டுத் தூங்கச்சென்றால், யாதொரு தொந்தரவு மின்றி நன்றாய்த்தூங்கிச் சுகம் பெறலாம்.

இன்றிரவே ஒருகோப்பை தயாரித்துச் சாப்பிடுங்கள்

கலக்கவும் குடிக்கவும் மிகவும் இலேசானது

Borden's
THE IMPROVED
MALTED MILK
Borden's
MALTED MILK

விலைகுறைந்த திறமான மோல்டட்மில்க்
பெரிய போத்தல் 1-90 சிறியபோத்தல் 1-05

Y3—3-9-40

சுகபோகமான ஸ்நானத்திற்கு — லிப்ரா

டொயிலெற் சவர்க்காரம்

சிறந்தது எது என்று கண்டு பிடிக்கும் பொது ஜனங்களுக்கு இதுவரை எவரும் தரமுன்வராத மிகச் சிறந்த சவர்க்காரம்;

சரீரத்திலுள்ள தோலைச் சுத்த மாக்குகின்றது; மென்மையாக்குகின்றது; வசமாகுந் தன்மையும் வசீகரமும் மடையச் செய்கின்றது

பெங்கால் கெமிக்கல் & பாமகோட்டிக்கல் லிமிற்றெட்
கல்கத்தா: பம்பாய்.
இலங்கை ஸோல் ஏஜண்டுகள்: தி யூவணற்றெட் ட்ரேடிங்கம்பெனி,
தபாற்பெட்டி 377, கொழும்பு.

Mis159. 10-9-37—

இந்தியாவிலிருந்து சரியான உதவி

கிடைப்பதுபற்றிப் பிருத்தானிய தொழிற் கட்சியின் கருத்து

காங்கிரஸ் ஒத்துழைப்பது அவசியம்

பம்பாய் ஆக 24உ.

பம்பாய் குரானிக்கிள் பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதியதாவது:—

இந்தியாவில் சிறுபான்மைக் கட்சித் தலைவர்களுடனும் முஸ்லிம் லீக்குடனும் கலந்து பேசிய விபரத்தை இராஜப்பிரதிநிதி லண்டனுக்கு அறிவித்தபின் மீண்டும் இந்திய நிலைமையைப் பரிசீலனைசெய்வார்கள். இந்திய விஷயத்தை நன்கறிந்த பிருத்தானிய தொழிற்கட்சியினர் காங்கிரஸ் ஒத்துழைப்பின்றி நிருவாகசபை [illegible] க்கு மனப்பூர்வமான விசேஷ உதவி கிடைக்குமெனக் கருதுகின்றார்கள். இராஜப் பிரதிநிதி யோசனையை ஏற்றுக்கொள்ளக் காங்கிரஸ் இணங்காமையால் லண்டனிலுள்ள உத்தியோகஸ்தர்கள் ஏமாற்றமடைந்திருப்பதாய் "குரானிக்கிள்" கூறுகிறது.

"டைம்ஸ் ஒவ் இந்தியா"வின் லண்டன் நிருபர் காங்கிரஸ் தீர்மானத்தை லண்டன் அசட்டை செய்துவிட்டது என்று எழுதுகிறார்.

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

(வி)

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 89 C 1-11-39 to 31-10-40)

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible]

பத்திரக்கிரயம்

[illegible]
தமிழ் ரூபா 5.00 இங்கிலீசு தமிழும் 9.00
[illegible] 5.00 இங்கிலீசு தமிழும் 12.00
[illegible] 9.00 இங்கிலீசு தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினாலன்றிக் கவனிக்கப்படமாட்டா

குயின்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை — நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊறாத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

(Y. 89. B 12-8-39—11-8-40.)

பல் வைத்தியர்

எஸ். சாஸ்பந்திராஜா

லைசென்ஸ் பெற்ற பல்வைத்தியர்; கண் பரிசோதிக்கும் திறமை வாய்ந்தவர்.

3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (ரேகுக்கட்டிடத்துக்குக் கிட்ட)

ஆலோசனைக்குரிய காலம் முற்பகல் 8 மணி தொடக்கம் 12 மணிவரை.

உங்கள் மூக்குக் கண்ணாடியின் ஓடின் அல்லது கம்பிகள் அல்லது கண்ணாடிகள் உடைந்தால், தயவுசெய்து அவற்றை மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். அவை மிகச் சரியாகவும் விரைவாகவும் திருத்திக் கொடுக்கப்படும். குறூக்ஸ் ஸ்பிரோ, சிலிண்டர் பிளேனோ, சிலிண்டர் ஆதியாம் விரும்பத்தக்க, தற்கால மாதிரிக்கேற்ற, அழகான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. சாஸ்திர ரீதியான எந்தக் கண்பரிசோதனைக்குமேற்றதான கண்ணாடிகளும் உண்டு. பவுண்மூலாம் கொடுத்த கண்ணாடிக் கம்பிகளும் நிக்கல் வெள்ளியாற் செய்த கம்பிகளும் மிகச் சமீபத்தில் ஐரோப்பாவிலிருந்து தருவிக்கப்பட்ட எல்லா விதமாக நவீன பிரேம்களும் எம்மிடம் உண்டு.

டக்டர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு அம்சமும் மிக்க கவனமாகவும் திறமையாகவும் பூர்த்தி செய்யப்படும்.

எங்கள் விலைகுறைவு. நியாயமானது

Y 19 2-5 o 1-5-41

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. Adchalingam resid.ng at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday, September 5, 1940.